REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 29 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 230 | Thursday 29, September, 2022 | 16 பக்கங்கள் | 40/-




## நாட்டை, மக்களை நேசிக்கத் தவறினால் தேசத்தை கட்டியெழுப்பவே முடியாது

### அருகிவிட்ட மனிதாபிமானத்தை மீள துளிர்விடச் செய்வதில் ஊடகங்களுக்கு பெரும் பங்குண்டு

### லேக்ஹவுஸ் 'ஊடக அகடமி' ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



லேக்ஹவுஸ் நிறுவன ஊடக அகடமியை அங்குரார்ப்பணம் செய்த ஊடகத் துறை, அமைச்சர் பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவன தலைவருமான அனுஷ பெல்பிட்ட, லேக்ஹவுஸ் நிறுவன நிதிப்பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், செயற்பாட்டு பணிப்பாளர் மஞ்சுள மாகும்புர ஆகியோர் அகடமிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுடன்...

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இளம் தலைமுறையினர் நாட்டையும் நாட்டு மக்களையும் சூழலையும் நேசிக்க தவறுவார்களேயானால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாதென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். மனிதாபிமானம் சிறந்து விளங்கிய 06

## ஜப்பானிய பிரதமர் மற்றும் பேரரசருடன் ஜனாதிபதி சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடாவுக்கும் (Fumio Kishida) இடையிலான சந்திப்பு நேற்று (28) முற்பகல் டோக்கியோவிலுள்ள அகசகா மாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அன்புடன் வரவேற்ற ஜப்பானிய பிரதமர், ஜனாதிபதியாக பதவியேற்றமைக்காக தனது வாழ்த்துகளை இதன்போது ஜனாதிபதிக்கு தெரிவித்தார்.

இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இதேவேளை, ஜப்பானிய பேரரசர் நருஹிதோவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலான சந்திப்பொன்றும் நேற்று (28) முற்பகல் 06

### வெளிநாடுகளில் வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவருக்கும்

# தாய்நாட்டை கட்டியெழுப்ப முன்வருமாறு பகிரங்க அழைப்பு

### புலத்திலிருந்து கொழும்பு வந்துள்ள தமிழர் பிரதிநிதிகள் அறைகூவல்



**மர்லின் மரிக்கார்**

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் அனைவரும் அச்சம் களைந்து இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டுமென அறைகூவல் விடுப்பதாக ஜேர்மனியிலிருந்து இலங்கை வந்துள்ள புலம்பெயர் முதலீட்டாளர்களில் ஒருவரான மாட்டின் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப உதவி ஒத்துழைப்புகளை நல்க முன்வருமாறு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள புலம்பெயர் முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதி செயலகத்தில் உயரதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பைத் தொடர்ந்து கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு 06

## சமூக ஊடகங்களில் அவதூறான கருத்துக்களை தெரிவிக்க முடியாது

### அரச ஊழியர்களுக்கு கட்டுப்பாடு விதித்து சுற்றறிக்கை



### மீறுவோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடும் போது பின்பற்ற வேண்டிய முறைமை தொடர்பில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சு விசேட 06

## வவுனியாவுக்கு திடீரென விஜயம் செய்த நாமல் MP

### மக்கள் பிரச்சினைகளை கேட்டறிந்தார்



வவுனியாவிற்கு விஜயம் செய்த முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்று கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்த சந்திப்புக்களில் கலந்து கொண்டார்.

வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், 06

## ADB 57 ஆவது மாநாட்டில் ஜனாதிபதி ரணில் தலைமை



ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து நேற்றிரவு பிலிப்பைன்ஸுக்கு விஜயம் செய்ததுடன் அங்கு நடைபெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவது அதிபர்கள் மாநாட்டுக்கு தலைமை வகிக்கவுள்ளார்.

மேற்படி மாநாடு கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமானதுடன் 30 ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிலிப்பைன்சில் தங்கியுள்ள காலத்தில் 06

### இந்த ஆண்டு மட்டும் 3.8 பில். டொலர் உதவி

## அவசர நிலைமைகளில் இலங்கைக்கு உதவினோம்

### ஐ.நா அமர்வில் ஜெய்சங்கர் பேச்சு



முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கைக்கு இந்த ஆண்டு 3.8 பில்லியன் டொலர் நிதியுதவியாக இந்தியா வழங்கியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், 06

## குருந்தூர்மலை தொடர்பில் தவறான புரிதல்களால் சிக்கல்

### அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெளிவுபடுத்தல்



முல்லைத்தீவு குருந்தூர்மலையில் இடம்பெறும் தொடர்ச்சியான நிகழ்வுகள் தவறான புரிதலால் இடம்பெற்றுள்ளதென நம்புவதாக புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் பிரதேசத்திற்கு சொந்தமான காணிகளே தொல்பொருள் பிரதேசமாக பெயரிடப்படுமே தவிர அங்கு சிங்கள குடியேற்றம் நடைபெறாது என்றும் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்படும் தொன்மை 06

## சவூதி பிரதமராக இளவரசர் சல்மான்

### அமைச்சரவை மாற்றத்தின் பின் நியமனம்



சவூதி அரேபிய மன்னர் சல்மானின் மகனும் முடிக்குரிய இளவரசருமான மொஹம்மத் பின் சல்மான் அந்நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னர் சல்மானின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்துடன், 06

### கொழும்பு, கஜிமாவத்தை தீ விபத்து

## 80 வீடுகள் முற்றாக தீக்கிரை 300 பேர் வரை இடம்பெயர்வு

### 54 மாணவர்களின் பாடநூல்களும் எரிந்து நாசம்



கொழும்பு, கிராண்ட்பாஸ், கஜிமாவத்தை குடியிருப்பு தொகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக சுமார் 80 தற்காலிக குடிசை வீடுகள் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது. நேற்று முன்தினமிரவு 08.00 மணியளவில் இத் திடீர் தீ விபத்துச் சம்பவம் ஏற்பட்டது.

கொழும்பு மாநகர தீயணைப்புப் பிரிவினர் 06

## இலங்கைக்கு மேலதிகமான உதவிகளை வழங்க தயார்

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவிப்பு



இலங்கைக்கு மேலதிக உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 06

### கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் தொடர்பில்

## இலங்கையில் தேடப்பட்ட இருவர் தமிழகத்தில் கைது



இலங்கையில் தேடப்பட்டு வந்த இரு குற்றவாளிகள் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவ்விருவரும் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் ஆகிய குற்றங்களுக்காக பல நாட்களாக தேடப்பட்டு வந்தனர். இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் 22ம் திகதி 06

### மே 09 வன்முறைகளில் போது

## ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த மூவர் கைது



கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (27) கொழும்பு மத்திய குற்ற விசாரணை பிரிவினரால் அந் நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கைதான நபர்களை 06

### முதலைகளின் நடமாட்டத்தால்

## அம்பாறை மாவட்ட மக்கள் அச்சத்தில்

**கல்முனை விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மாவடிப்பள்ளி 06

### 10 ஆண்டுகளில் 100 பில். டொலர்கள்:

## இலங்கையில் முதலீடு செய்ய தயாராகிறது அதானி நிறுவனம்



இந்திய அதானி குழுமம் எதிர்வரும் 10 ஆண்டுகளில் 100 பில்லியன் டொலரை இலங்கையில் முதலீடு செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வலுசக்தி துறைக்கே அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதானி குழுமம் எதிர்பார்த்துள்ளதாக 06

### கொள்ளையர்களை மடக்கிப்பிடித்த

## பொலிஸ் சார்ஜன்டுக்கு பதவி உயர்வும் பணப் பரிசும்



தம்புத்தேகம தனியார் வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதற்காக வர்த்தகர் ஒருவர் கொண்டு சென்ற சுமார் 2 கோடி ரூபா பணத்தை கொள்ளையிட்ட இரு கொள்ளையர்களை மடக்கிப்பிடித்த சார்ஜன்ட் புத்திக குமாரவுக்கு 25 இலட்சம் ரூபா பணப் பரிசும் சப் இன்ஸ்பெக்டர் பதவி உயர்வும் வழங்குவதற்கு 06

# நகர்வலம்








கொழும்பு 07 இலுள்ள தெவட்டகஹ ஜும்ஆப் பள்ளிவாசலில் ரபியுல் அவ்வல் மாதத்தில் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்த மீலாத் தின நிகழ்வு மற்றும் செய்க் உஸ்மான் வலியுல்லாஹ் தர்ஹா ஆகியவற்றில் கொடியேற்ற நிகழ்வுகள் திங்கட்கிழமை (26) பள்ளிவாசலின் தலைவர் றியாஸ் சாலி தலைமையில் நடைபெற்றன. (படங்கள்: சுதத் மலவீர)

## இலஞ்சம் பெற்ற கிராம அதிகாரி கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அனுமதிப்பத்திரமின்றி மரம் வெட்டுவதற்காக நபரொருவரிடம் 10,000 ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரொருவரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் நொச்சியாகம பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 333 குசும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமை செய்துவந்த கிராம உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரான கிராம உத்தியோகத்தர் நொச்சியாகம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## பாவனைக்கு உதவாத 3,000 கிலோ சீனி மீட்பு; இருவர் கைது

### களஞ்சியசாலை சீல் வைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பேலியகொட பகுதியில் பொலிஸ் விசேட செயலணி அதிகாரிகள் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, பாவனைக்குதவாத 3,000 கிலோ சீனி கைப்பற்றப்பட் டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசேட செயலணி தெரிவித்தது.

பொலிஸ் விசேட செயலணிக்கு கிடைத்த தகவல்களையடுத்து பேலியகொட பொலிஸ் பிரதேசத்திலுள்ள நவநுகே பகுதியிலுள்ள களஞ்சியசாலையொன்றை முற்றுகையிட்டுள்ள நிலையிலேயே அங்கிருந்து பாவனைக்குதவாத 3,000 கிலோ சீனி கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரும் 41 மற்றும் 48 வயதையுடையவர்களென்றும் அவர்களை மேலதிக விசாரணைக்காக பேலியகொட பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் சீனி களஞ்சியசாலை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செயலணி மேலும் தெரிவித்தது.

## ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே பொருளாதார சவாலை வெற்றி கொள்ளலாம்

### பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமென பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் அதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது மற்றும் அரச வங்கிகள் அதற்காக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலான விஷேட பேச்சுவார்த்தையொன்று நேற்று முன்தினம் நிதி அமைச்சில் நடைபெற்றது.

பதில் நிதி அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்த பேச்சு வார்த்தையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள அசௌகரியங்கள், பொருளாதார நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தி கடன் வழங்குவது உள்ளிட்ட வங்கி நடவடிக்கைகளின் போது அரசு மற்றும் அரச வங்கிகள் இணைந்து சலுகை அடிப்படையிலான இணைந்த செயற்பாடுகளை பின்பற்ற வேண்டியது பொருத்தமானது என்றும் பதில் அமைச்சர் இதன் போது அந்த அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நாடு முகம் கொடுத்துள்ள சவாலான நிலையில் பொருத்தமான குறுகிய கால மற்றும் நீண்ட கால இலகு செயற்திட்டங்களைப் பின்பற்ற வேண்டியது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருளாதார ரீதியில் நாடு நெருக்கடியான நிலையை எதிர் கொண்டுள்ள இந்த சூழ்நிலையில் அனைவரும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம் தொடர்பில் வலியுறுத்தியுள்ள பதில் அமைச்சர், நாட்டின் பொருளாதாரத்தை நிலையானதாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நிதி அமைச்சின் அதிகாரிகள், திறைசேரி மற்றும் அரச வங்கிகளின் அதிகாரிகளும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'யானை-மனித மோதல்' புத்தளத்தில் செயலமர்வு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் பிராந்திய வனஜீவராசிகள் திணைக்களம் ஏற்பாடு செய்த யானை மனித மோதல் உள்ளிட்ட வனஜீவராசிகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பாக புத்தளம் மாவட்ட செய்தியாளர்களை தெளிவுபடுத்தும் முழு நாள் செயலமர்வொன்று சனிக்கிழமை (24) புத்தளம் கச்சேரி வீதியில் அமைந்துள்ள வடமேல் சுற்றுலா ஊக்குவிப்பு விடுதியில் நடைபெற்றது.

புத்தளம் பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள அத்தியட்சகர் ஹிரந்த கமகே தலைமையில் இந் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது யானை மனித மோதல்களில் உயிரிழந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு மூன்று நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பல்வேறு தலைப்புகளில் விரிவுரைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## எகிப்து காலநிலை மாநாட்டில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் பங்கேற்பு



கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்

எதிர்வரும் நவம்பர் மாதம் எகிப்தில் நடைபெறவுள்ள காலநிலை மாநாட்டில் சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கலந்து கொள்ளவுள்ளதாக சுற்றாடல் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். இதில் இலங்கைக்கான எகிப்து தூதுவர் மேஜர் மொஸ்லே, இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாரா ஹால்டன், அமைச்சின் செயலாளர் அனில் ஜயசிங்க, யுஎன்டிபி இலங்கை ஒருங்கிணைப்பாளர் கிறிஸ்டியன் ஸ்கூக் யுஎன்டிபி மளின் ஹேவிக் உதவி வதிவிட பிரதிநிதி ஆகியோர்களும் கலந்துகொண்டனர்.

## கோதுமை மா, முட்டை தட்டுப்பாடு; நாடளாவிய ரீதியில் 2000 க்கும் மேற்பட்ட பேக்கரிகளுக்கு பூட்டு

### துறைசார்ந்த ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் பாதிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கோதுமை மா, முட்டை உள்ளிட்ட மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள 2000 க்கும் மேற்பட்ட பேக்கரிகள் முழுமையாக மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பேக்கரி தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட மற்றும் அதனை வாழ்வாதாரமாகக் கொண்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருவதாக தெரிவித்துள்ள அவர், பேக்கரி உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களை விநியோகித்து வந்த நிறுவனங்கள் பலவும் மூடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டில் தற்போது பாரியளவு உற்பத்திகளை மேற்கொள்ளும் சிறு தொகை பேக்கரிகளே இயங்கி வருவதாகவும் கோதுமை மா தயாரிப்பு நிறுவனங்கள் இவ்வாறு பாரிய பேக்கரிகளுக்கு மாத்திரமே கோதுமை மாவை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த நெருக்கடி நிலை காரணமாக தென் மாகாணத்தில் 60 வீதத்திற்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாகவும் அதனால் பேஸ்ரி உள்ளிட்ட தயாரிப்புகளை வழங்க முடியாததால் சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பேக்கரி உற்பத்திகள் போதியளவு விநியோகிக்கப்படாததால் பெருமளவிலான ஹோட்டல்களும் சிற்றுண்டிச்சாலைகளும் மூடப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அதுதொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.





பேருவளை பொலிஸ் நிலையத்திற்கு புகழ் சேர்த்த பொலிஸ் அதிகாரிகளை கௌரவிக்கும் நிகழ்வொன்று பேருவளை சாரா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் களுத்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஜேசுந்தர அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் மதகுருமார்கள், ஊர் முக்கியஸ்தர்கள், சிவில் பாதுகாப்பு கமிட்டி உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் பங்குபற்றினர். படம்: பேருவளை விசேட நிருபர்

## வெலிகம அறபாவில் நாளை சின்னம் சூட்டும் வைபவம்

வெலிகம தினகரன் நிருபர்

வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) இல் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் நாளை 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி வெபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் எம். ட. எம் முதஹ்ஹர் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் அதிதிகளாக வெலிகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேசேகர மற்றும் வெலிகம கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரேனுகா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

## புத்தளத்தில் இன்று வட்டமேசை கலந்துரையாடல்

புத்தளம் தினகரன் நிருபர்

இளையோரின் சமூக ஆய்வுகளை பகிரும் வட்டமேசை கலந்துரையாடலொன்று புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள வில்பத்து கேட் விடுதியில் இன்று வியாழக்கிழமை (29) காலை 09 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

புத்தளம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் அதன் கருத்திட்ட அதிகாரி ஆர். சுகுனா தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மேல் மாகாண தமிழ் மக்களின் அடிப்படை தேவைகள் தொடர்பில் விசேட கூட்டம்

மேல் மாகாண தமிழ் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய தமிழ் கூட்டமைப்பொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசனின் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தலை நகர் வாழ் வடபுல தமிழர்களின் மூத்த அரசியல் தலைவரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான திரு. குமர குருபரன் கலந்துகொண்டார்.




மேல் மாகாண தமிழ் மக்களின் அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்ற பல தேவைகள் முன்னெடுக்கபடவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இதன்போது முன்வைக்கப்பட்டதோடு தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகளுக்கு அப்பால் நடைமுறை பிரச்சினைகளும் உள்ளதாக இதில் கலந்து கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

இதனை அடிப்படையாக கொண்டு ஒற்றுமையான கூட்டணி ஒன்றினை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையென்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் புதிய முயற்சியினை முன்னெடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படுமென்றும் முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மேற்படி கூட்டம் நேற்று (28) மாலை ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பணிமனையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வடமத்திய மாகாண இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வடமத்திய மாகாண இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தொழில் வழிகாட்டல் வடமத்திய மாகாண சபை மூலம் " ரன் மாவத்த " என்ற பெயரில் கடந்த (24) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தின் ஆலோசனையின் கீழ் மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டாரவின் தொனிப்பொருளில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் போது அரச பல்கலைக்கழகம், அரச வங்கி, தொழில்வாய்ப்பு அலுவலகம், தொழில்நுட்ப கல்லூரி உள்ளிட்ட அரச அலுவலகம் மற்றும் 71 உள்நாட்டு, வெளிநாட்டு முன்னணி தொழில்வாய்ப்பு நிறுவனங்கள் இதன் போது கலந்து கொண்டன. அம்பாறை மற்றும் திருகோணமலை போன்ற தூரப்



பிரதேச இளைஞர் யுவதிகள் உட்பட அநுராதபுர மாவட்ட இளைஞர் யுவதிகள் என 4000 ற்கும் அதிகமானோர் இதில் பங்கு பற்றியிருந்தனர். முறையான திட்டத்தின் மூலம் புத்தம் புதிய கணனிகளுடன் வருகை தந்த இளைஞர் யுவதிகள் பதிவு செய்யப்பட்டு சகலரினதும் கல்வித் தகைமைகள் சரிபார்க்கப்பட்டு வினாத்தாள்கள் மூலம் அறிவு திறமைக்கு ஏற்ப பங்கு பற்றிய சகலருக்கும் செயலமர்வு நடாத்தப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 29 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.03 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.05 |
| இஷா | 07.14 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் புரட்டாதி 12

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய சக்கரவர்த்தி நருஹிதோவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (28) முற்பகல் டோக்கியோவிலுள்ள அகசகா மாளிகையில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.



மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் நவராத்திரி விழாவில் முதல் நாளான கடந்த திங்கட்கிழமை (26) மாலை நடைபெற்ற சுஹாசினி பூஜை, விளக்குப் பூஜை மற்றும் முப்பெரும் தேவியருக்கான வசந்த மண்டப பூஜை ஆகியவற்றில் விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரண கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம்.

## 'வியத்புர' வீடமைப்புத் திட்டத்திலுள்ள 01ஆவது வீடு டொலர்களில் விற்பனை

### டுபாயிலுள்ள இலங்கையரால் கொள்வனவு; 10 வீத விலைக்கழிவுடன் வீடுகளை வாங்கலாம்

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீடுகளை டொலர்களுக்கு விற்பனை செய்யும் அரசின் வேலைத் திட்டத்தின் கீழ் டுபாயில் பணிபுரியும் இலங்கையர் ஒருவர் முதலாவது வீட்டைக் கொள்வனவு செய்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. வியத்புர வீடமைப்புத் திட்டத்திலிருந்து இந்த வீடு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நடுத்தர வருமானமுள்ளவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு டொலர்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள தொழிலாளர்களுக்கு டொலர்களைச் செலுத்தி கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க டொலர் மூலம் பணம் செலுத்தி வீடுகளைக் கொள்வனவு செய்வோருக்கு 10% கழிவு வழங்கப்படவுள்ளது. 02 படுக்கையறைகளைக் கொண்ட வீட்டின் பெறுமதி 01கோடியே 58 இலட்சம் ரூபாவாகும்.

இந்த வீட்டை 10% கழிவுடன் 01 கோடியே 42 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியும். வெளிநாடுகளில் தொழில்புரியும் பலர் இந்த வீடுகளைக் கொள்வனவு செய்ய விருப்பப்பட்டுள்ளனர். இதன்படிம10% விலைக் கழிவுடன் 01கோடியே 42 இலட்சம் ரூபாவுக்கு முதலாவதாக டுபாயில் பணி புரியும் இலங்கையர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 2,75,000 அமெரிக்க டொலர்களைச் சம்பாதிப்பதே நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீடமைப்பு அமைச்சின் நோக்கமாகும்.

**கொழும்பு, கஜிமாவத்தை தீ விபத்து**

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க ஜனாதிபதி பணிப்பு

### ஜப்பானிலிருந்து ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு

கொழும்பு, பாலத்துறை, கஜிமாவத்தை தோட்ட குடியிருப்பில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து நிவாரணங்களையும் உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, தீ விபத்து சம்பவம் குறித்து அறிந்துகொண்டதையடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு அரசாங்க அதிபர், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மற்றும் முப்படைத் தளபதிகள், தீயணைப்பு பிரிவினர், சுகாதார அதிகாரிகள், உள்ளிட்ட அனைத்து அரசாங்கத் தரப்பினரையும் தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான தேவைகளை நேற்று முன்தினம் முதலே பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். குறிப்பாக தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தாய்மார், பெண்கள், பிள்ளைகள் உள்ளிட்டோருக்கான தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணிகளை ஜனாதிபதியின் செயலாளர் உடனடியாக ஆரம்பித்துள்ளார்.



## இலங்கையில் சிறுவர்கள் என ஏற்றுக்கொள்ளப்படும் வயது எல்லை 16 இலிருந்து 18 ஆக உயர்கிறது

### சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்த முன்மொழிவு

இலங்கைக்குள் சிறுவராக இருக்க வேண்டிய ஒருவரின் வயதெல்லை பதினாறிலிருந்து பதினெட்டாக உயர்த்தப்பட வேண்டும் என, சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண் – பெண் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாந்து புள்ளே தலைமையில் அண்மையில் கூடியபோது (22) இதுபற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.



இதற்கமைய "சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்" என்ற பதத்துக்குப் பதிலாக "சிறுவர் கட்டளைச்சட்டம்" என்றும், "சிறுவர் மற்றும் இளம் ஆட்கள்" என்ற வசனத்துக்குப் பதிலாக "சிறுவர்" என்ற பதத்தைத் திருத்துவதற்கும் இதன் ஊடாக முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் அல்லது விதியில் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பில், அறிவித்தலில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "சிறுவர்கள்" எனக் குறிப்பிடப்படும்

06

**கஜிமாவத்தை தீ விபத்து**

## அறிக்கையை விரைவாக தயாரிக்குமாறு பிரதமர் பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு, மோதரை, மாதம்பிட்டி பகுதியில் கஜிமாவத்தை வீடுகள் தீக்கிரையான சம்பவம் தொடர்பில் இறுதி அறிக்கையை விரைவாக தயாரிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் நடைபெற்றது. அதன்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த ஒன்றரை வருட காலத்தில் மூன்று தடவைகள் இந்த குடியிருப்புப் பகுதியில் தீ விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள்

06



**பிலியந்தலை கோடீஸ்வர வர்த்தகர் வீட்டில்**

## 02 கோடி ரூபா பெறுமதியான நகைகள் பட்டப்பகலில் கொள்ளை

### வெளிநாட்டு நாணயத் தாள்களும் அபகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிலியந்தலை, மகுலுதுவ பகுதியில் பட்டப்பகலில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீடொன்று உடைக்கப்பட்டு இரண்டு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையர்கள் வீட்டிலுள்ள அலுமாரியை திறந்து அதிலுள்ள தங்க நகைகள் மற்றும் யூரோக்களையும் கொள்ளையடித்துள்ளதாகவும் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெறும் போது வீட்டில் எவரும் இருக்கவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையர் அந்த வீட்டைக் கொள்ளையடிப்பதற்கு முன்பாக கூண்டுக்குள் கட்டப்பட்டிருந்த நாய்களை திறந்து வெளியில் அனுப்பிய பின்பே தமது செயற்பாடுகளை கச்சிதமாக செய்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் மேற்படி வர்த்தகர் தொடர்பில் நன்றாக அறிந்து வைத்துள்ள நபர் அல்லது குழுவொன்று இந்த திருட்டை நடத்தியிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணை அதிகாரிகளுடன் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சனத் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 06 பேர் தலைமன்னாரில் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்லமுயற்சித்த 6 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் 06 பேரையும் தலைமன்னார் வெலிபுர கடற்பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். கடற்படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின் போது வெலிபுர பகுதியில்

சந்தேகத்திற்கிடமான வகையில் தங்கியிருந்த 6 பேரையும் விசாரணை செய்ததில் அவர்கள் கடல் மார்க்கமாக நாட்டில் இருந்து வேறு நாடு ஒன்றுக்கு புறப்படத் தயாராக இருந்தமை தெரிய வந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

படகு வரும்வரை அவர்கள் காத்திருந்த போதே கடற்படையினரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், 18 வயதுக்கு மேற்பட்ட இரண்டு ஆண்கள் ஒரு பெண் மற்றும் 18 வயதுக்கு குறைவானவர்கள் மூவரும் இதில் உள்ளடங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் வவுனியா மற்றும் மொரவெவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் மேலும் விசாரணைகளுக்காக அவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

**விவசாய காணி, கிராமங்களுக்குள் புகும்**

## காட்டு யானைகளால் அரசுக்கு வருடாந்தம் ரூ.2,800 மில்.செலவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யானை மனித மோதல்கள் அதிகரித்து வருவதையடுத்து யானைகளை கலைப்பதற்காக தேவைப்படும் யானை வெடிகளுக்காக அரசாங்கம் வருடாந்தம் 2,800 மில்லியன் ரூபாவை செலவிட்டு வருவதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் அதற்கென 14 இலட்சம் யானை வெடிகள் தேவைப்படுவதாகவும் அவை உள்ளூர் பட்டாசு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்தது.

காட்டு யானைகள் விவசாய காணிகள் மற்றும் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் வேளையில் அவற்றை அங்கிருந்து கலைப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்களம் மக்களுக்கு இலவசமாகவே யானை வெடிகளை வழங்கி வருகிறது.

அதேவேளை யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் போது அவற்றைக் கலைப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் எந்தவித ஒத்துழைப்பும் கிடைப்பதில்லையென மக்கள் தமக்கு முறைப்பாடுகளை முன்வைத்து வருவதாக துறைக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அந்த அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அமைச்சரிடம் கருத்துத் தெரிவித்துள்ள மேற்படி உத்தியோகத்தர்கள் காட்டு யானைகள் விவசாயக் காணி மற்றும் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் போது மக்கள் வன

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 228.14 | 238.98 |
| கனடியன் டொலர் | 258.78 | 270.48 |
| யூரோ | 340.93 | 355.48 |
| ஜப்பான் யென் | 2.4676 | 2.5692 |
| சிங்கப்பூர் டொலர் | 246.75 | 257.19 |
| ஸ்ட்ரேலிங் பவுன்ஸ் | 380.58 | 395.71 |
| சுவிஸ் பிராங்க் | 357.53 | 374.62 |
| அமெரிக்க டொலர் | 359.18 | 369.93 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 962.56 | கட்டார் ரியால் | 98.80 |
| குவைத் டினார் | 1,168.00 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 942.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 02

## குறள் தரும் சிந்தனை



ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்

*பிறர்மேல் படை எடுத்துச் செல்பவர்க்கும் சிறந்தது அரண்; பிறருக்குப் பயந்து உள்ளிருப்பவர்க்கும் அதுவே சிறந்தது.*

# நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் சாதகமான பிரதிபலிப்பு

இலங்கை அந்நிய செலாவணியை அடிப்படையாகக் கொண்ட பற்றாக்குறையினால் பொருளாதார வீழ்ச்சிக்கு முகம் கொடுத்துள்ளது. அதன் விளைவான நெருக்கடியிலும் வீழச்சியிலும் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளும் நடவடிக்கைகளும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நெருக்கடியின் தாக்கங்களும் அழுத்தங்களும் மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படவே செய்கின்றன.

இந்த சூழலில் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளில் இருந்து சாதகமானதும் ஆக்கபூர்வமானதுமான பதில்களை இலங்கை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை உருவாகி இருக்கின்றது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி பெற்றுக் கொள்ளும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்கள் வெற்றி அளித்துள்ளன. இப்பேச்சுவார்த்தைகளில் அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் இது வரலாற்று சாதனை என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

இதேவேளை இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புகளை வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே அறிவித்திருக்கின்றது. அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில் பிலிப்பைன்ஸ் நாட்டில் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவது மாநாட்டை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடாத்தவும் அவ்வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, இந்நாடு இப்பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக ஆரம்பமானது முதல் இந்நாட்டை மீட்டெடுப்பதற்கு உதவும் வகையில் பல்வேறு உதவி ஒத்துழைப்புகளை இந்தியா நல்கி வந்துள்ளது. குறிப்பாக இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்ட கடனுதவியை வழங்கி உதவியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இவ்வாறு பாரிய நிதியுதவியை குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் வழங்கியுள்ளது. ஜப்பான் நாடும் இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றது. இதன் நிமித்தம் இலங்கைக்கான கடன் வழங்குநர்களுடன் நடத்தப்படும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் முன்னணி பங்கை வகிக்கத் தயாராக இருப்பதாகவும் அந்நாடு குறிப்பிட்டிருக்கின்றது.

அத்தோடு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் கொண்டிருப்பதையும் எதிர்காலத்தில் இந்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயத் தயாராக இருப்பதையும் ஜப்பான் வெளிப்படுத்தி உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கு மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அச்சமயமே இலங்கையின் தற்போதைய சூழல் குறித்த ஜப்பானின் இத்தகைய நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, இலங்கை ஜனாதிபதியை ஜப்பானில் சந்தித்த சிங்கப்பூர் பிரதமர், இலங்கையில் மீண்டும் முதலீடுகளை மேற்கொள்ள கொண்டிருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தி உள்ளார். அத்தோடு சீனாவும் ஏற்கனவே சில உறுதிப்பாடுகளை அறிவித்து இருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாட்டை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளில் இவ்வாறு சாதகமான பிரதிபலிப்புகளையும் ஆக்கபூர்வமான அறிவிப்புகளையும் இலங்கை பெற்று வருகின்றது. இதன் பயனாக நாட்டில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் துளிர்விட்ட வண்ணமுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்துவரும் அங்கீகாரத்தின் பிரதிபலனாகவே இவ்வாறான ஆக்கபூர்வமானதும் சாதகமானதுமான பதில்களை இலங்கை பெற்றுக் கொள்கின்றது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.

பொருளாதார ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாடொன்றுக்கு அளிக்கப்பட வேண்டிய தலைமையை ஜனாதிபதி வழங்கிக் கொண்டிருக்கிறார். அதற்கு சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு கிடைக்கப்பெற்று வரும் சாதகமான பதில்கள் நல்ல எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து சகல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கபடுகின்றன. அத்திட்டங்களுக்கு சர்வதேச ரீதியிலான அங்கீகாரமே இலங்கை பெற்றுக் கொள்ளும் சாதமான பிரதிபலிப்புகளாக உள்ளன என்பதை புரிந்து கொள்வது அவசியம்.

ஆகவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆரதவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் இவ்விடயத்தில் செயற்பட வேண்டும். அதுவே இந்நாட்டை உண்மையாகவே நேசிக்கும் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார வல்லரசாக உயர்ந்தது இந்திய தேசம்!

இந்தியப் பொருளாதாரத்தின் அசுர வளர்ச்சியானது பிரதமர் நரேந்திர மோடியின் திறமைமிகு சாதனைகளில் ஒன்றாகுமென்று இந்திய பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிரிட்டனை முந்தியவாறு உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறியுள்ளது என்ற செய்தி சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 'கிரேட் பிரிட்டன்' என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டுள்ள பிரித்தானியாவின் பொருளாதாரம் தற்போது சுருங்கியுள்ளது. அக்காலத்தில் பிரிட்டனின் பொருளாதாரம் வலுவாக இருந்தது. இந்த நாடு உலகில் இதுவரை முதல் ஐந்து நாடுகளின் பொருளாதாரப் பட்டியலில் தனது இடத்தை உறுதியாகப் பிடித்திருந்தது.ஆனால் இப்போது இந்தியா பிரிட்டனை முந்திக் கொண்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் ஆளுமைக்குக் கிடைத்த வெற்றியென்றே அதனைப் பதிவு செய்ய முடியுனெ்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், பிரதமர் மோடி தொடர்பான புத்தகமொன்று புதுடில்லியில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது இந்த விழாவில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர் பேசுகையில் "இந்த புத்தகத்தில் 10 அத்தியாயங்களில் பிரதமர் மோடியின் 86 உரைகள் உள்ளன. சிக்கலான சமூகப் பிரச்சினைகள் பற்றிய ஆழமான புரிதலையும், அவரது தெளிவான பார்வையையும் விளக்குகிறது. எதிர்கால வரலாற்றாசிரியர்களுக்கு இந்த தொகுப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சிக்கலான தேசியப் பிரச்சினைகளில் பிரதமர் மோடியின் எண்ணங்களையும், தலைமைத்துவத்தையும் இந்த உரைகளின் மூலம் ஒருவர் புரிந்து கொள்ள முடியும். இதன் விளைவாக இந்தியாவை உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக மாற்றியுள்ளது" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

நரேந்திர மோடியின் புகழுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இந்தியாவின் கடைசிக் குடிமகனுக்கு சேவை செய்வதிலும் அவர் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றார். அவரது ஆர்வத்துடனான இந்தச் செயல்கள்தான் மக்களுக்கு அவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றன. அனைத்துத் தரப்பு மக்களையும் இணைக்கும் திறனை பிரதமர் மோடி கொண்டுள்ளார்.

பல்வேறு சர்வதேச ஆய்வுகள் பிரதமர் மோடியை உலகில் மிகவும் பிடித்தமான பிரதமர் என்று குறிப்பிட்டுள்ளன. உலகநாடுகளின் சக்தி வாய்ந்த தலைவர்கள் பிரதமர் நநரேந்திர மோடியின் சாதனைகளை விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

வெளிநாட்டு உறவுகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் கலாசார பாரம்பரியத்தை மீட்டெடுப்பதில் அவர் கொண்டுள்ள ஆர்வமானது இந்திய மக்களை நன்கு கவர்ந்துள்ளது. இந்தியாவின் சுற்றுச்சூழல் குறித்த பிரதமர் நரேந்திர மோடியின் யோசனைகள், பசுமை இந்தியாவை மேம்படுத்தும் திட்டங்கள் போன்றன மக்களை நன்கு கவர்ந்துள்ளன.




## பிரித்தானியாவை முந்தியபடி அபார வளர்ச்சி!



இதேவேளை பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கைகளால் எட்டு ஆண்டு காலப்பகுதியில் இந்திய பொருளாதாரம் அசுர வளர்ச்சி அடைந்துள்ளதாக பொருளாதார ஆய்வுகள் கூறுகின்றன.

பிரிட்டனை மிஞ்சும் வகையில் உலகின் 5 ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளமை ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் பெருமை அளிப்பதாகும். இந்த வெற்றியானது ஒவ்வொரு இந்தியனுக்கும் மிகுந்த மனநிறைவை அளிக்கிறது. வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரம் மற்றும் வேகமாக அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பிரிட்டன் போராடும் இன்றைய நேரத்தில், இந்தியாவினால் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் தாக்கப்பட்டு, காயப்பட்டு, இரத்தம் சிந்திய ஒரு நாடு இந்தியா ஆகும். இந்நிலையில் இழந்த பொருளாதாரச் செழிப்பு மற்றும் செல்வாக்கை எவ்வாறு சீராக மீட்டெடுக்க இந்தியாவினால் முடிந்தது என்பதுதான் வியப்பு! அந்த வெற்றியானது பிரதமர் நரேந்திர மோடியின் திறமையின் விளைவு என்பதுதான் பொதுவான கருத்து ஆகும்.

வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தை கடந்த எட்டு ஆண்டுகளில் முன்னணிக்குக் கொண்டு வந்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. தேசியப் பொருளாதாரத்தை உயர் நிலைக்கு கொண்டு வருவதற்காக பிரதமர் நரேந்திர மோடி, பெரிய கொள்கை மாற்றங்களைச் செய்ததை இங்கு நினைவுபடுத்துவது அவசியமாகும்.

பிரதமர் மோடி கடந்த காலத்தை புறந்தள்ளி, இந்தியர்களின் பல ஏமாற்றங்களை ஈடு செய்து, அவர்களின் திறனை வெளிக்கொணர்ந்து, இந்தியாவென்ற மாபெரும் தேசத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் ஒரு எதிர்காலத்தைத் தொடங்கினார்.

பிரதமர் மோடி கொண்டு வந்த நிலையான மாற்றங்களின் தாக்கத்தை இந்த எட்டு ஆண்டுகள் கண்டன. 2022_23 நிதியாண்டின் முதல் காலாண்டில் 13.5 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்தியா ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இப்போது உருவெடுத்துள்ளது. எதிர்காலத்தில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும் என்று பொருளாதார நிபுணர்கள் எதிர்வுகூருகின்றனர்.

தொழில் துறைக்கான ஊக்குவிப்பு அடிப்படையிலான திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி ஊக்குவித்தார். ரூபா 2 இலட்சம் கோடி மதிப்பிலான உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டம் பலன்களைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் மக்கள்தொகையில் சுமார் மூன்றில் இரண்டு பங்குள்ள ஏழைகள் மற்றும் பின்தங்கியவர்களுக்கு இலவச ரேஷன் பொருட்களைப் பெறும் உலகின் மிகப்பெரிய இலவச உணவுத் திட்டம், உலகின் மிகப்பெரிய கொரோனா தடுப்பூசித் திட்டம் ஆகியவை இந்தியாவின் பொருளாதாரம் தொற்றுநோயின் அழிவுகளிலிருந்து வேகமாக மீண்டு வருவதற்கு பெரிதும் உதவின.

இதேவேளை இன்றைய இந்தியா இணைய பயனாளர்கள் எண்ணிக்கை அடிப்படையில் உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேபோன்று நுகர்வோர் சந்தையிலும் வலுவான இடம்பிடித்துள்ளது. இந்தியா இப்போது உலகளாவிய வர்த்தகத்தில் வலுவான பங்கேற்பாளராக இருக்கின்றது.

இந்தியா முந்திய ஏற்றுமதி சாதனைகளை முறியடித்து, இந்த ஆண்டு ரூபா 50 இலட்சம் கோடியைத் தொட்டுள்ளது. இந்தியப் பொருட்களின் ஏற்றுமதி ரூபா 31 இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. ஒரு காலத்தில் பிறரின் கருணையில் வாழ்ந்த நாடு, இன்று உலகிற்கே உணவை ஏற்றுமதி செய்யும் நாடாகத் திகழ்கிறது.

## பிரதமர் நரேந்திர மோடியின் புதிய சிந்தனையில் உதித்த திட்டங்களுக்கு கிடைத்துள்ள வெற்றி!

மோடி அரசின் வெற்றிக்கதைகளின் பட்டியல் நீளமானது. ஒவ்வொரு மாதமும் டொலர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு புதிய நிறுவனங்கள் சேர்க்கப்படுகின்றன. பிரதமர் மோடியின் அயராத தலைமையின் கீழ், இந்தியாவின் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் சில நூறு என்ற எண்ணிக்கையிலிருந்து தற்போது 70,000ஆக வளர்ந்துள்ளன. ஸ்டார்ட்அப் நிறுவனங்களில் 50 சதவீதம் இரண்டாம், மூன்றாம் அடுக்கு நகரங்களில் உள்ளன. இந்த வெற்றி பிரதமர் மோடியால் அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் இந்தியா புரட்சியால் விளைந்ததாகும்.

2014 இல் இந்தியாவில் 6.5 கோடி புரோட்பேண்ட் சந்தாதாரர்கள் இருந்தனர்; இன்று 78 கோடிக்கும் அதிகமான சந்தாதாரர்கள் உள்ளனர்.

வளரும் இந்தியா என்பது கண்ணாடி மால்களில் மட்டும் அல்ல என்பதை நன்கு உணர்ந்த பிரதமர் மோடி, வறுமையைக் குறைப்பதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

*(06ஆம் பக்கம் பார்க்க)*

**எஸ். சாரங்கன்...**

# ஜேர்மனியில் கோவிலூர் செல்வராஜனின் 70 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்

கோவிலூர் செல்வராஜனின் 70 ஆவது பிறந்த நாள் germany ஹம் காமாட்சி அன்னை ஆலயத்தில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் ஆசியுடன், மதிவாணன் குருக்கள் தலைமையில் அண்மையில் கொண்டாடப்பட்டது.

ஈழத்துக்கலையுலகில் கவிஞராக, எழுத்தாளராக, பாடலாசிரியராக, பாடகராக, நடிகராக, அறிவிப்பாளராக பல்வேறு ஆற்றல்களுடன் திகழ்பவர் கோவிலூர் செல்வராஜன் ஆவார். அவருக்கு உலகளாவிய ரீதியில் பல விருதுகள் கிடைத்துள்ளன. அவருக்கு இந்த ஆண்டு இந்தியாவில் கிடைத்த சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருதை தமிழ்நாடு கிராமிய கலைகள் வளர்ச்சி மற்றும் நல அமைப்பு அறக்கட்டளையினர் ஜேர்மனிக்கு அனுப்பியிருந்தார்கள்.

அந்த விருது அவரது அகவை எழுபது கொண்டாட்ட நாளில் வழங்கப்பட்டது. உலககோவில் காணொளி சேவையை நடத்திவரும்ராஜகருணா அவர்களும் கோவிலூர் செல்வராஜனின் எழுபதாவது பிறந்தநாளின் போது இணைந்து கொண்டார்.

## இந்தியாவில் வழங்கப்பட்ட வாழ்நாள் சாதனையாளர் விருது



கோவிலூர் செல்வராஜன் 'அழகிய தமிழ் மகள்', 'மகுடம் சூடிய மன்னர்கள்' ஆகிய நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருபவர்.

அந்த வகையில் ஜெர்மனி ஹம் காமாட்சி அம்மன் ஆலயத்தில் கூடியிருந்த அடியார்கள் மத்தியில் அவரது வாழ்நாள் சாதனையாளர் விருது வாசித்து அளிக்கப்பட்டது. கோவிலூர் செல்வராஜன் எங்கள் அழைப்பை ஏற்று லண்டனிலிருந்து வந்து தனது பிறந்தநாளை கொண்டாடி விருதையும் பெற்றுக் கொண்டார். அவர் தொடர்ந்தும் தனது கலை,இலக்கியப் பணிகளில் முனைப்புடன் இயங்க வேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனையாகும்.

**மீனா உதயா...**
ஜெர்மனி

# நான்காம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடிய Colombo City Centre

Colombo City Centre அதன் நான்காவது ஆண்டுவிழாவை கடந்த 19 ஆம் திகதி சிறப்பு நிகழ்ச்சிகளுடன் கொண்டாடியது. ஆண்டுவிழாவுக்கு முந்திய வார இறுதியில், ஏராளமான மக்கள் CCC இற்கு வருகை தந்ததோடு, அவர்கள் தங்களது குடும்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியாக பொழுதை கழித்தனர். இங்குள்ள விற்பனை நிலையங்களில் பிரத்தியேக ஆண்டுவிழா சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

நான்கு வருட வெற்றிகரமான பயணத்தை நினைவுகூரும் வகையில் 4 ஆவது ஆண்டுவிழாவை CCC சிறப்பாகக் கொண்டாடியது. CCC நிர்வாகம் மற்றும் இங்குள்ள விற்பனை நிலைய உரிமையாளர்கள் உத்தியோகபூர்வமாக கேக் வெட்டும் நிகழ்வில் பங்குபற்றியதோடு, வணிக நிலையங்களை நடத்தும் சமூகத்தினருக்கு கடந்த 4 ஆண்டுகள் அவர்கள் வழங்கிய பங்களிப்புக்காக சிறப்பு பாராட்டுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டுவிழாவுடன் இணைந்ததாக கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் ஆண்டுவிழா கருப்பொருளின் கீழ் ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கு ஒருமுறை சீட்டிழுக்கப்பட்டு 4 அதிர்ஷ்டசாலிகளுக்கு மதிப்புமிக்க பரிசுகள் வழங்கப்பட்டன.



செப்டம்பர் 18ஆம் திகதியன்று En Route வழங்கிய Jazz இசையை ரசித்தவாறே Playtrix இல் ஆடம்பர உணவை சுவைக்கும் வாய்ப்பு வ ழங்கப்பட்டது. மேலும், இதில் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை மாலை வேலையில் Playt rix இலவசமாக இனிப்பு வழங்கியது. ஆண்டுவிழா நிமித்தம் அநேகமான கடைகள் சிறப்பு தள்ளுபடிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கின.

ஆண்டுவிழா வார இறுதியில் CCC இற்கு வருகை தந்த குழந்தைகளுக்காக பல சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

Colombo City Centre கடந்த நான்கு வருடங்களில் பல மைல்கற்களை கடந்துள்ளதோடு, இலங்கையர்கள் தமது குடும்பத்துடன் வருகை தந்து ஒன்றாக ஓரிடத்தில் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிக்கக்கூடிய ஒரு இடத்தை உருவாக்குதே முதன்மை நோக்கமாகும்.

Colombo City Centre ஆண்டு விழா தொடர்பாக கருத்து தெரிவித்த பிரதம செயற்பாட்டு அதிகாரி ஹிருஷ்க பெர்னாண்டோ, இக்கருத்தை தெரிவித்தார்.

# பஸ்கள் நிறுத்தாமையால் மாணவர்கள் வீதியில் போராட்டம்





**ஓமந்தை விஷேட நிருபர்**

பஸ்கள் நிறுத்தாமல் செல்வதால் பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக தெரிவித்து வவுனியா கொல்லர் புளியங்குளம் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காலை 7 மணியளவில் ஏ 9 பிரதான வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கருத்து தெரிவித்த பொதுமக்கள்,

பாடசாலைக்கு செல்வதற்காக காலை 6 மணிக்கே எமது பிள்ளைகள் வீட்டிலிருந்து சென்று பல மணிநேரம் காத்திருந்தும் பஸ்கள் நிறுத்தப்படாமையினால் வீட்டிற்கே திரும்பி வருகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதேவேளை பாடசாலை முடிவடைந்த பின்னரும் மாலை 4 மணியளவிலேயே பிள்ளைகள் வீட்டிற்கு வருகின்றனர். இதனால் எமது பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்படுவதுடன், பல்வேறு அசௌகரியங்களையும் சந்திக்கின்றனர். எனவே எமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி பஸ்களை நிறுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கொல்லர் புளியங்குளம், மன்னகுளம், குஞ்சுக்குளம் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டதுடன், மாணவர்களை வீதியில் காத்திருக்க விடாதீர்கள், மாணவர்களின் பயணத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள்,எமது உரிமையை காப்பாற்றுங்கள் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்கார்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்த கனகராயன் குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மாணவர்கள் போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு பொலிஸார் ஒத்துழைப்புகளை வழங்குவதோடு, பஸ் சாரதி நடத்துனர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்குவதாக வாக்குறுதி வழங்கியதன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் முடிவடைந்தது.

## கடற்றொழில் இணையத்தினர், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினர் இந்திய துணை தூதுவரை சந்தித்து பேச்சு



**யாழ்.விசேட நிருபர்**

வடக்கு மாகாண கடற்றொழில் இணையத்தினர், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினர் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கான இந்தியதுணை தூதரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்.

மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறும் விதமாக குறித்த கருத்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்திய இழுவை மடித்தொழிலினால் வடக்கு பகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக இந்திய முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடுவதற்கு அனுமதி பெற்று தருமாறு கேட்டுக் கொண்டதாக கடற்றொழில் இணையத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

இதற்கு இந்திய துணை தூதர் அனுமதி பெற்றுத் தருவதாக தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

## ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டு; சுழிபுரத்தில் நாளை சொற்பொழிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' நடைபெற்று வருகின்றன.

சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்கள் (றொறன்ரோ, கனடா) அவர்களின் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் அவர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே, 40 ஆவது . சொற்பொழிவு யாழ். சுழிபுரம் கிழக்கு பத்திரகாளி அம்பாள் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு இந்து சமய கலாசார உத்தியோகத்தர் திருமதி அஜிதா கோபிநாத் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமான் சைவத்தமிழ் உலகின் அடையாளம்' எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(அ.கனகசூரியர்)

## "கிராமத்துக்கு தகவல் சட்டம்"

**யாழ். விசேட நிருபர்**

"கிராமத்துக்கு தகவல் சட்டம்" என்னும் தொனிப்பொருளில் வெகுஜன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை இக் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் தகவல் அறியும் ஆணைக்குழுவுடன் இணைந்து நடத்தப்பட்டது.



தகவல் அறியும் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.ரி. உபாலி அபேரத்தன, தகவல் அறியும் ஆணைக் குழுவின் ஆணையாளர்ளான கிசாலி பின்ரோ ஜெயவர்தன,ஜெகத் லியோன் ஆராய்ச்சி, யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைத்துறை பேராசிரியர் கலாநிதி எஸ்.ரகுராம், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாவட்ட பிரதேச செயலக அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். இக்கலந்துரையாடலில் தகவல் அறியும் சட்டம் தொடர்பாக கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

## தனிமையில் வசித்த பெண் மீது தாக்குதல்; நகைகளும் கொள்ளை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.தொல்புரம் பகுதியில் தனிமையில் வசித்த பெண்ணொருவரை வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் தாக்கி நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரியவருகின்றது.

இதுதொடர்பில் வட்டுக் கோட்டை பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதிகாலை இருவர் வீட்டின் வளாகத்தினுள் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராக்களை உடைத்து சேதப்படுத்திய பின்னர், வீட்டின் பிரதான கதவினை சேதப்படுத்தி வீட்டினுள் அத்துமீறி நுழைந்து தனிமையிலிருந்த பெண் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் , இரு குடும்பங்களுக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே பெண்ணின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றம், சமூக நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் UNDP நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தின் சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, சங்கானை, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்தல், கண்காணிப்பு மேற்கொள்ளல் ஆகியன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன் சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் சட்ட நடவடிக்கைகளை மேம்படுத்தல், இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கும் பயிற்சி நெறிகளை ஆரம்பித்தல், மொழித்திறன் பயிற்சி வழங்குதல், பெண்களுக்கான உதவித்திட்டங்கள் வழங்குதல் முதலான திட்டங்களுடன், சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வுகள், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மேலும், இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாகாண விவசாயப் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட பதிவாளர் நாயகம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், UNDP திட்ட இணைப்பாளர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கடல் வளத்தை காப்போம் எனும் தொனிப்பொருளில் வடமாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் வேலனை சாட்டி சுற்றுலா கடற்கரையோர தூய்மைப்படுத்தல் செயற்பாடுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (படம் யாழ்.விசேட நிருபர்)

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பேரணி

**யாழ். விசேட நிருபர்**

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக யாழ்.போதனா வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பேரணியொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை முன்றலில் இன்றைய தினம் வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் இப்பேரணி ஆரம்பித்து மணிக்கூட்டு கோபுர வீதியூடாக, யாழ். பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தை அடையவுள்ளதுடன் மாவட்ட செயலரிடம் மகஜரும் கையளிக்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் இயற்றாலை அ.மி.த.க பாடசாலை மாணவர்களின் குடிநீர் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு நன்னீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கும் நிகழ்வும், திறப்பு விழாவும் நேற்றைய தினம் புதன்கிழமை அதிபர் சி.தவசொரூபி தலைமையில் இடம்பெற்றது.

15 இலட்சம் ரூபா பெறுமதியான நன்னீர் சுத்திகரிப்பு இயந்திரமும் இதன்போது கையளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் விருந்தினர்களாக மேஜர் ஜெனரல் விஜயசுந்தர, கொறியன்ற் பிரான்ஸ் ஒவ் கோட்ஸ் இன்ரநஷனல் நிறுவனத்தின் தலைவர் சோய், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் 52 ஆவது படைப்பிரிவின் கொமாண்டர் மேஜர் ஜெனரல் கேபி.எஸ்.ஏ. பெர்ணான்டோ கொறியன்ற் பிரான்ஸ் ஒவ் கோட்ஸ் இலங்கைக்கான செயலாளர் லலித நாணயக்கார, ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சமூக ஊடகங்களில் அவதூறான...

சுற்றுநிருபமொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த சுற்றுநிருபங்களை பின்பற்றாமல் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடுவோர் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தக்கூடிய குற்றவாளியாக கருதப்படுவரென்றும் அந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுநிருபம் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளதுடன் தாபனக் கோவை இரண்டாவது பிரிவின் XLVII அத்தியாயத்தின் ஆறாவது மற்றும் ஏழாவது சரத்துக்களில் காணப்படும் முறைமையை பின்பற்ற தவறும் அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்களே ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தக்கூடிய குற்றவாளியாகக் கருதப்படுவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியல் உரிமையை அனுபவிப்பதற்கு உரித்தற்ற அதிகாரிகளினால் மேற்கொள்ளக்கூடாத ஏற்பாடுகள் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் போது அதற்காக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அந்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருந்தூர்மலை தொடர்பில்...

பொருட்களை பாதுகாக்கும் நடவடிக்கை எதிர்காலத்திலும் தொடரும் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். விகாரைகள் தேவாலயங்கள் சட்டம் தற்போது வரையறுக்கப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடிய பின்னர் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் முதலீடு செய்ய...

அதானி நிறுவனத்தின் தலைவர் கௌதம் அதானி தெரிவித்துள்ளார். அதானி நிறுவனம் கடந்த 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல்வேறு நாடுகளிலும் அதானி குழுமம் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

## ஜப்பானிய பிரதமர் மற்றும்...

நடைபெற்றது. டோக்கியோவிலுள்ள பேரரசரின் உத்தியோகபூர்வ இல்லமான இம்பீரியல் அரண்மனையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சவூதி பிரதமராக இளவரசர்...

பிரதமராக இளவரசர் மொஹம்மத் பின் சல்மான் நேற்றுமுன்தினம் (27) நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை மன்னர் சல்மான், பிரதமராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபிய மன்னர் பதவி 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டிலிருந்து சவூதி அரேபிய மன்னரே பிரதமராகவும் பதவி வகித்து வருவது வழக்கமாகவுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் மன்னராகவும் பிரதமராகவும் மன்னர் சல்மான் பதவி வகித்து வருகிறார்.

இந்நிலையில், புதிய பிரதமராக இளவரசர் மொஹம்மத் பின் சல்மானை (37) பிரதமராக அவர் நியமித்துள்ளார்.

இதேவேளை, இளவரசர் மொஹம்மத் பின் சல்மான் இதுவரை வகித்த பாதுகாப்பு அமைச்சர் பதவி, மன்னரின் மற்றொரு மகனான இளவரசர் காலித் பின் சல்மானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் தேடப்பட்ட...

முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தனுஷ்கோடி வழியாக அகதிகளாக தமிழகம் வந்தடைந்த இலங்கை தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் 21ம் திகதி, இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் இந்தியக் கடற்கரைக்கு வந்திருப்பதாக தகவல் கிடைத்ததும், கடலோரக் காவல் படையினர், இலங்கைத் தமிழர்களை மீட்டு, மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தமிழகத்துக்கு தப்பிச் சென்றவர்களிடம் இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய விசாரணையில், இலங்கையின் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரகுமார் என்ற நபர் பிரபல நகைக்கடையை உடைத்து கொள்ளையடித்துச் சென்றது தெரியவந்தது.

ஆள் கடத்தல் மற்றும் கொலை வழக்கில் அவர் பிணையில் வெளியில் இருப்பதும் தெரியவந்தது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிருபாகரன் என அடையாளம் காணப்பட்ட மற்றொரு நபரும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு இலங்கையில் தேடப்பட்டு வருகிறார். இதைத்தொடர்ந்து, தேடப்படும் குற்றவாளிகள் இருவரும் இராமநாதபுரம் மண்டபம் முகாமில் அகதிகளாக வாழ்வதாக இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் தமிழக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## இலங்கைக்கு மேலதிகமான...

நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நீண்டகால பங்காளியாக இலங்கை திகழ்வதாக குறிப்பிட்ட அவர், அதற்கமைய, தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வேலைத்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கைக்கு மேலதிக நிதியுதவிகளை வழங்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ் சார்ஜன்டுக்கு பதவி...

தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அநுராதபுரத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

எம்மால் செய்யப்பட்டுள்ள பரிந்துரையை பொலிஸ் மா அதிபர் அங்கீகரித்த பின்னர் பொதுச்சேவை ஆணைக் குழுவினால் அவர் சப்இன்ஸ்பெக்டர் பதவிக்கு உயர்த்தப்படுவார் என்றும் அத்துடன் அவருக்குப் பணப் பரிசும் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பொலிஸ் சார்ஜன்ட் புத்திககுமார எப்பாவல பிரதேசத்தில் வசிப்பவர்.

இதேவேளை, வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத், அவரது சேவையைப் பாராட்டுவதற்காக அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு தனது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார்.

## அவசர நிலைமைகளில்...

மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்தங்களின்போதும் இந்தியா அயல் நாடுகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கியுள்ளதாகவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நாடுகளின் கடன் நிலைமை மேலும் அதிகரிப்பது கவலைக்குரிய விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பயங்கரவாதம், தொற்றுநோய் போன்ற உலகளாவிய பிரச்சினைகளை எதிர்கொள்ள, ஒன்றிணைவு, கூட்டு ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் என்பன அவசியம் என்றும் ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

## வவுனியாவுக்கு திடீரென...

கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டவர்களுடன் அந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், அந்த கலந்துரையாடல்களில் அடுத்துவரும் உள்ளூராட்சி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் மீளவும் பொதுஜன பெரமுனவின் ஆட்சியை புதிய கூட்டணியாக மலரச் செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும், மக்களின் பிரச்சனைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதாகவும் அதில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி மாளிகைக்குள்...

கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் 22, 40 மற்றும் 55 வயதுடைய அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அம்பாறை மாவட்ட மக்கள்...

பாலம், சம்மாந்துறை பகுதி, ஒலுவில் பகுதி, நிந்தவூர், மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கிட்டங்கி நாவிதன்வெளி உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியில் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் சுமார் 9, 5, 4அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்மாவட்டத்தில் உள்ள களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருப்பதுடன், மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள், குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

மேலும் தற்போது சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள் கால்வாய்கள் அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளுக்கு இரையாகின்றன.

இப்பகுதியில் இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும் மாடுகளே இம்முதலைகளுக்கு இரையாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் முதலைகளின் நடமாட்டம் சம்பந்தமாக அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

மேலும் இவ்வருடம் ஜூன் மாத பகுதியில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களியோடை ஆற்றின் ஓரத்தில் தனது வளர்ப்பு மாட்டுக்கு புல் வெட்டுவதற்காக சென்ற குடும்பஸ்தர் ஒருவர் முதலை தாக்கியதில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ADB 57 ஆவது மாநாட்டில்...

அந்நாட்டின் ஜனாதிபதி பொங் பொங் மாகோசை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையை மேற்கொள்ள உள்ளார். அதனையடுத்து ஜனாதிபதி நாளை 30 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானின் முன்னாள் ஜனாதிபதி ஷின்ஸோ அபேவின் மரண சடங்குகளில் கலந்து கொள்வதற்காக கடந்த 26 ஆம் திகதி ஜப்பானிற்கான விஜயத்தை கொண்டார். அங்கு அவர் ஜப்பானிய பிரதமர், சிங்கப்பூர் பிரதமர் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 80 வீடுகள் முற்றாக தீக்கிரை...

மற்றும் கடற்படையின் 10 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்தத் தீ விபத்தினால், உயிர்ச்சேதங்களோ, எவருக்கும் காயங்களோ ஏற்படவில்லையென தெரிவித்த பொலிஸார் தீ விபத்து காரணமாக 80 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தனர். அத்துடன் சுமார் 54 மாணவர்களின் பாடப்புத்தகங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் களனிநதீ விகாரை மற்றும் முவதொர உயன அடுக்கு மாடி குடியிருப்பின் சனசமூக மண்டபத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாததுடன் கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கஜீமா வத்தை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிலிருந்து பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பணிப்புரைகளை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முப்படை தளபதிகள், கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி, தனது செயலாளருக்கு அறிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் அறிவித்துள்ளது.

அத்துடன் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் மற்றும் இழப்பு தொடர்பாக உடனடியாக அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் பிரதமர் தினேஸ் குணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, கஜீமாவத்தை தீ விபத்து தொடர்பில் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவொன்றை நியமித்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

நேற்று (28) நடைபெற்ற கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். கடந்த ஒன்றரை வருடத்தில் இந்த குடிசை வீடுகளில் மூன்று தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## தாய்நாட்டை கட்டியெழுப்ப...

குறிப்பிட்ட அவர், இன்று எமது தாய் நாடு பொருளாதார ரீதியில் மிகவும் சிரமமான நிலையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பின் பேரில் சுவிட்சர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்டு உலகில் 05 நாடுகளில் பணிகளை முன்னெடுக்கும் எமது பைனஸ் நிறுவனத்தினூடாக நாட்டுக்கு நல்ல விடயங்களைச் செய்வதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

எமது நிறுவனத்தின் தலைவர் விக்னேஷ்வரன் சிவபாதத்தின் எண்ணக்கருவுக்கமைய இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுத்து இந்நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கு உதவி ஒத்துழைப்புகளை நல்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். இதன் நிமித்தம் நாட்டுக்கு வெளியே புலம் பெயர்ந்துள்ள சகல மக்களையும் இணைத்துக்கொண்டு நாட்டை கட்டியெழுப்ப விரும்புகின்றோம்.

இதேவேளை, வவுனியாவில் மூன்று இடங்களில் கோழிவளர்ப்புப் பண்ணை திட்டத்தை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். இங்கு சுமார் 20,000 கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அதேநேரம் மரவள்ளிக் கிழங்கை மாவாக்கி ஏற்றுமதி செய்தவற்கான தொழிற்சாலையொன்றை பத்து கோடி ரூபா முதலீட்டுடன் அமைத்து வருகின்றோம். மரவள்ளிக்கிழங்கு மாவுக்கு ஐரோப்பிய சந்தையில் நல்ல கிராக்கியுள்ளது. அதனை இலக்காகக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

மேலும், வடக்கு கிழக்கில் சோளச் செய்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும்எதிர்பார்த்துள்ளோம். இதற்கு தேவையான காணிகளை அரசாங்கத்திடம் கோரியுள்ளோம். காணிகள் ஒதுக்கப்பட்டதும் இவ்வேலைத்திட்டத்தை எம்மால் ஆரம்பிக்க முடியும்.

சோளச் செய்கையை இங்கு விரிவாக முன்னெடுப்பதன் ஊடாக திரிபோஷா மற்றும் விலங்கு தீவனத் தயாரிப்பை இங்கேயே போதியளவில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். கோழித் தீவனமாகட்டும், மாட்டுத் தீவனமாகட்டும் அவற்றை உற்பத்தி செய்ய சோளம் முக்கிய மூலப்பொருளாக உள்ளது. அந்த மூலப்பொருளை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்து அதனைக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இதனைச் செய்ய முடியும். குறிப்பாக நெத்தலிக் கருவாடு, சிப்பி மற்றும் உளுந்து உள்ளிட்ட தானியங்கள் என்பன எமது நாட்டிலேயே கிடைக்கக்கூடியனவாக உள்ளன.

அவற்றைக் கொண்டு தரமான கால்நடை தீவனத்தை இங்கேயே தயாரிக்கக் கூடியதாக இருக்கும். அதனூடாக இத்துறையில் தன்னிறைவு அடைய முடிவதோடு அவற்றின் இறக்குமதியையும் நிறுத்தி அவற்றுக்கு செலவாகும் பெருந்தொகை அந்நியச் செலாவணியையும் மீதப்படுத்திக் கொள்ள முடியும்.

அதேநேரம் விவசாயத் துறையில் முதலீடுகளை மேற்கொண்டு விவசாயப் புரட்சியை ஏற்படுத்தவும் பங்களிக்க எதிர்பார்த்துள்ளோம். மரவள்ளிச் செய்கைக்காக வவுனியாவில் சுமார் 2,500 ஏக்கர் காணியை எதிர்பார்த்துள்ளோம். சோளச் செய்கைக்கென கிரானில் 637 ஏக்கர் காணியையும் பார்வையிட்டுள்ளோம். அத்தோடு கடற்றொழில் துறையில் முதலீடுகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பி தன்னிறைவு பொருளாதாரத்தை அடைய முடியும்.

புலம்பெயர்ந்துள்ளவர்கள் தயாகம் திரும்பவும் முதலீடுகளை மேற்கொள்ளவும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. எமக்கு தேவையான உதவி ஒத்துழைப்புகளை வழங்க அரச தலைவர்களும் உயரதிகாரிகளும், வெளிநாட்டு குடியகல்வாளர்கள் பராமரிப்பு அமைப்பும் (பி.கோ) பைனஸ் நிறுவனமும் தயாராக உள்ளது. ஆகவே இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்துள்ள இலங்கையரைத் தாயகத்தில் முதலீடுகளை மேற்கொண்டு நாட்டை ஒன்றுபட்டுக் கட்டியெழுப்ப முன்வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன் என்று குறிப்பிட்டார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பைனஸ் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்களான பி. ஜோன் வசந்தபாலன், என்.எம்.எம். சபீஹ் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## நாட்டை, மக்களை நேசிக்கத் தவறினால்...

எமது நாட்டில் மனிதர், மனிதர்களை படுகொலை செய்யுமளவுக்கு மனிதாபிமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், இது போன்ற குரோத மனப்பான்மைகள் மாற்றப்பட வேண்டுமென்றும் அதற்கான பொறுப்பு ஊடகங்களுக்கு மிக அதிகமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊடக அகடமியை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட்ட, கல்விமான்கள், பேராசிரியர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

லேக்ஹவுஸ் நிறுவனம் பத்திரிகைகளின் தாய்வீடாக விளங்குகின்றது. நாட்டு மக்களுக்காக டி.ஆர்.விஜேவர்த்தனவினால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் மூன்று மொழிகளிலும் பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிடுவதுடன் நாட்டின் சுதந்திரத்தின் போது அதற்காக பெரும் பங்களிப்பு வழங்கிய நிறுவனமாக செயற்பட்டுள்ளதைக் குறிப்பிட முடியும்.

அந்த வகையில் தேசியத்துக்கு முக்கியத்துவமளித்து மனிதாபிமானத்தை மதித்து செயற்படும் நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆரம்ப பத்திரிகை ஆசிரியர்களான மார்டின் விக்கிரமசிங்க போன்றோரையும் சிறப்பாக குறிப்பிட முடியும்.

எமது கலாசாரம் மனிதத்தன்மை அருகிவருகின்ற நிலையில் ஊடகங்கள் மூலம் அதனை மீளக் கொணர முடியும் என்பதே எமது நம்பிக்கை. குரோதம் நிறைந்ததாக ஒருவரையொருவர் படுகொலை செய்வது வரை எமது கலாசாரம் மற்றும் பண்பாடு மாற்றம் பெற்றுள்ள சூழலையே தற்போது காணமுடிகிறது.இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் நான் கசகஸ்தானில் நடைபெற்ற சர்வதேச சினிமா விருது விழாவில் கலந்துகொண்டிருந்தேன். அதற்கு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் நடிகர்கள் அதில் பங்கேற்றிருந்தனர். அவர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் என்னிடம் உங்கள் நாட்டு விமான நிலையத்துக்கான பாதைகள்

தடைசெய்யப்படுகின்றதா? அவ்வப்போது கடவுச் சீட்டுக்கள் அதிகாரமில்லாதவர்களால் பரிசோதனை செய்யப்படுகின்றதா? எந்த நேரத்திலும் வன்முறைகள் இடம்பெறுக்கின்றன. மக்களைத் தாக்கியும் படுகொலை செய்தும், குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த நிலையில் உங்கள் நாட்டுக்கு நாங்கள் வருகை தந்தால் எங்கள் பாதுகாப்பு தொடர்பில் உங்களால் உறுதிப்படுத்த முடியுமா? என்றும் அவர்கள் என்னிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

நான் அதற்குப் பதிலாக, சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. இப்போது அங்கு சகஜநிலை காணப்படுகிறது என்று தெளிவு படுத்தினேன்.

ஊடகங்களானது நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாதவகையில் செயற்படுவது அவசியம். நாம் கல்வி கற்ற காலத்தில் சிறந்த படிப்பினைகள் எமக்குக் கிடைத்தன.

தற்போது அப்படியான நிலைமைகள் மிகவும் அருகிவிட்டது. நாட்டில் புதிதாக பிறக்கும் பிள்ளைகள் தமது நாட்டுக்கும் மக்களுக்கும் சூழலுக்கும் அன்பு செய்யாவிட்டால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது போகும்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊடக அகடமி சிறந்த துறை சார்ந்த விற்பன்னர்களின் பங்களிப்புடன் கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. இந்த நிறுவனத்தில் பாரிய வளங்கள் உள்ளன. அதனை உபயோகித்து கற்கும்போதே வேலை செய்வது, வேலைசெய்யும் போதே கற்பது என இரண்டையும் பெற்றுக்கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். உலகில் கற்பிப்பதே சிறந்த தொழிலாகும். அந்தவகையில் பேராசிரியர், கல்விமான்கள் பலரும் இந்த அகடமியில் கற்பித்தலில் ஈடுபடவுள்ளனர்.

இந்த அகடமி மேலும் ஒரு படி உயர்ந்து ஒரு வெளியீட்டகமாகவும் முன்னேற வேண்டும் என்றார்.

## இலங்கையில் சிறுவர்கள் என... 03ஆம் பக்கத் தொடர்

அனைத்து இடங்களிலும் அந்த வசனம் நீக்கப்பட வேண்டும் என இதன் ஊடாக முன்மொழியப்பட்டுள்ளது.

முதன்மைச் சட்டத்தின் 71 பிரிவின் (6) உபபிரிவில் உள்ள 'இந்த வயதுப் பிரிவில் உள்ள எந்தவொரு சிறுவர் அல்லது இளம் ஆட்களுக்குத் தண்டனை வழங்கும்போது எந்தவொரு பெற்றோர், ஆசிரியர் அல்லது உத்தியோகபூர்வ பாதுகாவலருக்குக் காணப்படும் உரிமையைப் பாதிக்கும் வகையில் அமையக் கூடாது' என்ற திருத்தம் இத்திருத்தச் சட்டமூலகத்தின் ஊடாக நீக்கப்பட்டுள்ளது.

23வது அத்தியாயமான சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின் நோக்கமானது சிறுவர்களின் மற்றும் இளம் ஆட்களின் பாதுகாப்புக்காக சிறுவர் குற்றவாளிகளைக் கண்காணிக்க சிறுவர்களுக்கான நீதிமன்றத்தை நிறுவுவதற்கான உத்தரவுகளை உருவாக்குவதாகும்.

2022.07.18ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தம்) சட்டமூலத்துக்கு அமைய 23வது அத்தியாயம் திருத்தப்படவிருப்பதுடன், நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்திலிருந்து இத்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபோல, பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அதுகோரள, ரோஹினி கவிரத்ன, இரான் விக்ரமரத்ன, (கலாநிதி) ஹரினி அமரசூரிய, மஞ்சுளா திசாநாயக மற்றும் விசேட குழுவின் செயலாளர், பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர, சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## அறிக்கையை விரைவாக... 03ஆம் பக்கத் தொடர்

கிடைத்துள்ளதுடன் அதனை விசாரணை அறிக்கையின் போது கவனத்திற்கொண்டு இறுதி அறிக்கையை தயாரிக்குமாறும் பிரதமர் தெரிவித்துள்ளார். இதன்போது நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ள பிரதமர், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இந்த வீடுகள் நிரந்தர பதிவுக்கு முன்பதாக இடைக்கால குடியிருப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதை நிறுத்தமுடியுமா? என்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் தெரிவித்துள்ளார்.

இந்த பகுதி, சட்டபூர்வமற்ற குடியிருப்புகளாக காணப்படுவதாகவும் இந்தக் கூட்டத்தின் போது தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதால் அது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கொழும்பு மாவட்ட செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமித்து மேற்படி தீ விபத்து சம்பவம் மற்றும் அந்த இடத்தின் சட்டபூர்வமற்ற குடியிருப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக ஆராயமுடியுமென்றும் அந்த குழுவின் அறிக்கையின்படி தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

உணவு, தற்காலிக குடியிருப்பு, பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள், உள்ளிட்டவை மற்றும் இந்த தீ விபத்து சம்பவம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான நிவாரணம் ஆகியவற்றை கொழும்பு மாவட்ட செயலகத்தினால் விநியோகிப்பதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காட்டு யானைகளால்... 03ஆம் பக்கத் தொடர்

ஜீவராசிகள் உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தாலும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உரிய நேரத்தில் அவர்கள் அங்கு செல்லமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் யானை வெடிக்கான மூலப்பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்து வருவதனால் எதிர்வரும் காலங்களில் இதனைவிட அதிகமான தொகை அதற்காக செலவிடவேண்டி நேருமென அந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

## உலகின் ஐந்தாவது... (04ஆம் பக்கத் தொடர்)

அதன் பலனாக நுகர்வு சமத்துவமின்மை எவ்வாறு வெகுவாக குறைந்துள்ளது என்பதை சமீபத்திய ஐ.எம்.எப் ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. இவைதவிர, ஏழைகளுக்கான வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் ஆகிய சமூக மேம்பாட்டுக் குறியீடுகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பின்தங்கியவர்களுக்கு மானிய விலையில் சமையல் எரிவாயு வழங்குவது முதல் ஒவ்வொரு கிராமப்புற வீடுகளுக்கும் குழாயில் குடிநீரை கொண்டு சேர்ப்பது வரை பல திட்டங்கள் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதமர் மோடியின் 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' திட்டம் சீராக வடிவம் பெற்றுள்ளது. இது அரசையும் மக்களையும் உள்ளடக்கிய ஒருபார்வை கூட்டு முயற்சி. இந்தியா தற்சார்பு சவால்களை சந்திக்கவும், துன்பங்களை சமாளிக்கவும் தன்னம்பிக்கையுடன் தயாராக உள்ளது என்கிறார்கள் நிபுணர்கள்.

உலகளவில் ஐந்தாவது பெரிய பொருளாதாரம் மற்றும் வேகமாக வளரும் பொருளாதாரம் என்ற இரட்டை மைல்கற்களை கடப்பது இந்தியாவிற்கும் இந்தியர்களுக்கும் ஒரு மகத்தான சாதனை என்பதில் சந்தேகமில்லை.

இந்தக் கட்டத்தில் இருந்து 5 டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தை உருவாக்கும் பிரதமர் மோடியின் இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா தனது பயணத்தைத் தொடங்குகிறது.





நவராத்திரியை முன்னிட்டு கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட கலைவிழாவில் தரம் 4A மாணவர்களால் மேடையேற்றப்பட்ட நாடகத்தின் சில காட்சிகளையும் நாடகத்தில் பங்குபற்றிய மாணவ சிறார்களையும் படங்களில் காணலாம்.

# பயண வழிகளில் பஸ் சேவை இல்லாததால் மாணவர்கள் அவதி



நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை செல்லும் ஏ07 பிரதான வீதி காபர்ட் இடப்பட்டு புனரமைக்கப்பட்ட போதிலும், டெஸ்போர்ட் , கிரிமிட்டி வழிகளூடாக உரிய போக்குவரத்து சேவைகள் நடைபெறாதுள்ளதால்,

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வீதி வழியாக வரும் சில பேருந்துகள் பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்வதாகவும், உரிய அதிகாரிகள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறில்லையெனில்,தனியார் வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தி தருமாறும் இவர்கள் கோருகின்றனர்.இங்குள்ள போக்குவரத்து பிரச்சினைகள் குறித்து,நுவரெலியா பிரதேசசபை அபிவிருத்தி கூட்டம், மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் பேசப்பட்டும்,எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. இதனால், நானுஓயா பொலிஸாரால் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, நுவரெலியா பிரதேச செயலாளர் , இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான முகாமையாளர் , ஹற்றன் நுவரெலியா தனியார் போக்குவரத்து சபைக்கு உரித்தான அதிகாரிகள் எனப்பலர் ஒன்றிணைந்து இப்போக்குவரத்து பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவந்திருந்தனர்.

இந்நிலையில், கடந்த மாதங்களில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, பேரூந்து உரிமையாளர்கள் தமது சுய இலாபத்திற்காக குறுக்கு வழிகளில் சேவை நடாத்துவதாலே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

(டி.சந்ரு)

# கங்கவட்டகோரல பிரதேசபைக்கு நாணய சுழற்சியில் புதிய தலைவர் தெரிவு

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி கங்கவட்டகோரல பிரதேச சபையின் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிசிர ரணசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாணய சுழற்சி முறையில் இந்தத் தெரிவு கடந்த (27) இடம்பெற்றது. மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மேனக ஹேரத் தலைமையில் சபை மண்டபத்தில் இத்தெரிவு இடம்பெற்றது.

கங்கவட்டகோரல பிரதேசசபை தலைவராகப் பணியாற்றிய டி. தர்மசேன காலமானதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இத்தெரிவு இடம்பெற்றது.

இத்தலைவர் பதவிக்கு நான்கு பேர் போட்டியிட்டனர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சமிந்த கருணாரத்ன, ரவிப்பிரிய சாமிகர மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிசிர ரணசிங்க ஆகியோர் போட்டியிட்டனர்.

சமிந்த கருணாரத்ன 10 வாக்குகளையும், ரவிப்பிரிய சாமிகர 02 வாக்குகளையும், சிசிர ரணசிங்க 08 வாக்குகளையும் பெற்றனர். குறைந்த வாக்குகளைப் பெற்ற ரவிப்பிரியா சாமிகர வெளியேற்றப்பட்டு அதிக வாக்குகளைப் பெற்ற இருவருக்குமிடையில் மீண்டும் வாக்கெடுப்பு இடம்பெற்றது. இருவரும் தலா 10 வாக்குகளைப் பெற்றதால் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய நாணயச் சுழற்சியில் முயற்சிக்க வேண்டியிருந்தது.

இந்தவகையில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் சிசிர ரணசிங்க சபையின் புதிய தலைவராக தெரிவானார்.

ஜனதா விமுக்தி பெரமுன உறுப்பினர் எவரும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை குறித்த வாக்கெடுப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்த ரவிப்பிரிய சாமிகர என்பவரை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் தாக்க முற்பட்டதையடுத்து பொலிசார் தலையிட்டு அதனை தடுத்து நிறுத்தினர்.



# மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த ஐவர் அதிகாரிகளால் கைது

மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்.

ஹோட்டன் தென்ன சமவெளியில் சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த ஐவர்,வன பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த ஐவரில் ஒருவர், நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினர் என தெரியவந்துள்ளது.

இவர்கள் ஐந்து பேரும் நீண்ட காலமாக சட்ட விரோதமாக ஹோட்டன் தென்ன சமவெளியில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில், பாரிய அளவில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளனர்.இவ்வாறான நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்போதே, ஹோட்டன் தென்ன சமவெளியில் உள்ள வன பாதுகாப்பு அதிகாரிகள் இவர்களை கைது செய்தனர்.

இவ்வாறு சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்ற இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளதாக வன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

APL Logistics

வர்த்தக நாமங்கள் மோசடியாக பயன்படுத்தப்படுவது பற்றிய அறிவித்தல்

APL Logistics Lanka Private Limited மற்றும் APL Logistics Lanka Freight Forwarding Private Limited ஆகியவற்றின் APL Logistics வர்த்தக நாமம் பொது மக்கள் மத்தியில் தவறாகப் பயன்படுத்தப்படுவது பற்றி அறிவிற்கப்படுகின்றது. தொலைபேசி தொடர்புகள் மற்றும் கிராபிக்ஸ் மூலம் அங்கீகரிக்கப்படாத வகையில் மேற்படி வர்த்தக நாமத்தைப் பயன்படுத்தி பொதுமக்களை ஏமாற்றும் முயற்சிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான சந்தர்பங்களில், பொருட்கள் விநியோகிப்பதற்கு முன் பணம் கோரப்படுகின்றது. மேலும் APL Logistics பெயரைக் கொண்ட போலி விலைப்பட்டியல்கள் மூலம் பணம் வசூலிக்கப்படுகின்றது.

APL Logistics தம்முடைய பாதுகாப்பிலுள்ள அல்லது போக்குவரதத்திலுள்ள தங்கள் வாடிக்கையாளர்களின் பொருட்களை வெளியிடுவதற்கு, தன் வாடிக்கையாளர்களிலுருந்து அல்லது பொதுமக்களிடமிருந்து தனிப்பட்ட விபரங்கள், மின்னஞ்சல் அல்லது பணம் செலுத்துதல் என்பவற்றைக் கோராது என்பதை நினைவில் கொள்ளவும். அவ்வாறு கோரும் தகவல்களில் ஏதேனுமொன்றை நீங்கள் பெற்றால், அனுப்புனருக்கு பதிலளிக்கவோ அல்லது ஒத்துழைக்கவோ வேண்டாம். அனுப்புநருடனான உங்கள் தொடர்பு நிதி இழப்பை ஏற்படுத்தினால், நீங்கள் உடனடியாக உங்கள் வங்கியைத் தொடர்பு கொள்ள வேண்டும் மற்றும்/அல்லது காவல்துறையில் புகாரளிக்கவும்.

மோசடி செயற்பாட்டின் காரணமாக முறையற்ற விதத்தில் ஏற்படும் செலவுகள், கட்டணங்கள் அல்லது செலுத்துதல் என்பவற்றுக்கு APL Logistics எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

# படைப்பிரிவுகளின் கொடிகளுக்கு ஆசீர்வாதம் பெறும் நிகழ்வுகள்



(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

இலங்கை இராணுவத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் இராணுவ தினத்தை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் சகல படைப் பிரிவுகளினதும் கொடிகளுக்கு ஆசிர்வாதம் பெறும் நிகழ்வு அண்மையில் (28) கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்றது.எதிர்வரும் ஒக்டோபர் மாதம் (10) இத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

ஆசிர்வாத நிகழ்வில் இராணுவத் தலைமையகம், தொண்டர் படைத் தலைமையகம், அனைத்து பாதுகாப்புப் படைத் தலைமையகங்கள், அனைத்து முன்னோக்கு பாதுகாப்பு பராமரிப்புப் பகுதிகள், படைப் பிரிவுகள்,படையணிகள், பிரிவுகள் மற்றும் இராணுவப் பயிற்சிப் பாடசாலைகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அனைத்து இராணுவக் கொடிகளும் ஆசிர்வாதங்களுக்காக தலதா மாளிகைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே உட்பட இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து படைப்பிரிவுகளிலும் இருந்து இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு வேலைத்திட்டம்



(காவத்தை தினகரன் விஷேட நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் உணவு மற்றும் போஷாக்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.சப்ரகமுவ மாகாண சபையின் கீழுள்ள அமைச்சுக்களால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகமவின் அழைப்பின் பேரில் நடைபெற்ற கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அகில சாலிய எல்லாவல தலைமையில் (27) இக்கூட்டம் இடம்பெற்றது.

மேலும் இரத்தினபுரி மாவட்ட போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி திட்டம் மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் உட்பட பல விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான ஜானக்க வக்கும்புர, பிரேமலால் ஜயசேகர, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி வலேபொட, வருன லியனகே, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அரச அதிகார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொது மக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கான இலங்கை கட்டளைகள் வரைவு

01. திரவ பெற்றோலியம் வாயுவைப் பாவித்து செயற்படும் வீட்டு, குறைந்த அமுக்கமுள்ள வாயு அடுப்புகளுக்கான இலங்கை கட்டளைகள் மாதிரி வரைவு

**SLS 451 : 20 XX (முதலாம் திருத்தம்)**

02. திரவ பெற்றோலியம் வாயு (LPG) இற்கான அமுக்க ஒழுங்குபடுத்தல் கருவிக்கான இலங்கை கட்டளைகள் வரைவு

**SLS 1180 : 20 XX (முதலாம் திருத்தம்)**

03. மனை சார்ந்த மற்றும் அதற்குச் சமமான மின் உபகரணங்கள் - பாதுகாப்பு பற்றிய இலங்கை கட்டளைகள் மாதிரி வரைவு

Part 1 : மின் வேலிக்காக பாவிக்கப்படும் ஊக்கி (Energizers) இற்கான விசேட தேவைப்பாடுகள்

**SLS XXXX : Part 1: 20 XX (IEC 60375 - 2 - 76)**

மேற்படி கட்டளை வரைவுகள், இலங்கை கட்டளைகள் பணியகத்தினால் பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள துறையிலிருந்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்காக இத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வரைவு இலங்கை கட்டளைகளாக அனுமதிப்பதற்கு முன்பு கிடைக்கப்பெறும் கருத்துக்கள், இலங்கை கட்டளைகள் பணியகத்தின் சம்பந்தப்பட்ட குழுவினால் கவனத்தில் கொள்ளப்பட்டு இறுதி திருத்தம் மேற்கொள்ளப்படும்.

மேற்படி இல. 01 மற்றும் 02 எனும் வரைவு, தேவைப்படுபவர்களுக்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆவணங்கள் மற்றும் தகவல்கள் பிரிவில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், www.slsi.lk இணைய தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய வரைவுகளை இப் பணியகத்தின் நூலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம்.

சகல விமர்சனங்களையும் 2022.11.30ம் திகதி அல்லது அதற்கு முன்பு பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கச் செய்யுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் பணியகம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08,**
**தொலைபேசி : 011-2671567-72**
**ஈமெயில் : dg@slsi.lk**
**இணையதளம் : www.slsi.lk**

இலங்கை கட்டளைகள் பணியகம்
தொழிநுட்பம் அமைச்சு

திகதி 27.09.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4891
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,092,570.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 8 5 8 9 0 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,239,412.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 921
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,215,980.00
வெற்றி இலக்கினம் A வெற்றி இலக்கங்கள் 06 30 45 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 127,306,824.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 200
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,427,820.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 05 09 34 48
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,585,611.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1346
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,939,240.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 0 7 4 6 7 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,115,440.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3133
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,517,700.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 22 47 49 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,524,863.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1239
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,402,080.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.272,840,942.00
ஆங்கில எழுத்து O சுப்பர் நம்பர் 23 வெற்றி எண்கள் 01 02 19 20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கின் குரல்



## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
# தனித்து தியாகிகள் தினம் அனுஷ்டிப்பு; தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தனித்து தியாகிகள் தினங்களை அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறது. இது உண்மையில் வேதனைக்குரிய விடயம். தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

தியாகி திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவையொட்டி மட்டக்களப்பு காந்திப் பூங்காவில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்...

இத்தனை இழப்புக்களுக்குப் பின்பும், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பும் எங்களுக்குள் ஒரு ஒற்றுமையில்லை என்பதை நினைக்கும் போது உண்மையில் வேதனையாக இருக்கின்றது. இருந்தாலும் தியாகங்கள் என்பது பல்வகைப்பட்டது.

திலீபனுடைய தியாகம் முற்றிலுமாக மாறுபட்ட ஒரு தியாகமாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம். ஏனென்றால், போராட்டத்தில் மோதலில், குண்டு வெடிப்பில் தன்னுடைய உயிரை எம் மக்களுக்காகத் தியாகம் செய்யாமல் உண்ணா நோன்பிருந்து அஹிம்சை வழியில், காந்திய வழியில் தன்னுடைய உயிரை ஈர்த்த ஒரேயொரு நபர் என்றுதான் நாங்கள் கூறக்கூடியதாக இருக்கும்.

திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து 12 நாட்களில் மரணத்தைத் தழுவியிருந்தார். அந்த ஐந்து கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகள் 35 வருடங்கள் கடந்த போதும் நிலுவையில், கோரிக்கைகளாகவே இருக்கின்றன என்றார்.

# ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமையில் கை வைக்காதே; தென்கிழக்குப் பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

நிந்தவூர் குறூப் நிருபர்



ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமையில் கை வைக்காமல், ஜனநாயக நாட்டில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட, தொழில்நுட்பவியல், மற்றும் முகாமைத்துவ பீடங்களை சேர்ந்த மாணவர்களால் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் (27) மாலை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 26ம் திகதி, தற்போதைய பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனினால், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு 06 மணித்தியாலத்திற்கு முன்பு பொலிஸாரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனும் கருத்துக்கு எதிர்ப்புக்

தெரிவிக்கும் முகமாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேலும் ஒரு ஜனநாயக நாட்டில், ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அனுமதி கோரப்படுவதென்பது, மறைமுகமாக ஆர்ப்பாட்டம் செய்ய தடை விதிக்கும் புதிய யுத்தியாக காணப்படுகிறது.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் பல்வேறு வழிகளில் மக்களை அடக்கியாளும் புதிய கலாசாரம் ஒன்றினை தோற்றுவித்துள்ளது. இது எதிர்காலத்தில் ஜனநாயக நீரோட்டத்தில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தங்களது கருத்துக்களை வெளியிட்டனர்.



சம்மாந்துறை புளக் 'j' பிரிவுக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக மௌலவி ஏ.முகம்மது சிராஜ்தீன், அம்பாறை மாவட்ட பதிவாளர் முன்னிலையில் மேலதிக அரசாங்க அதிபரிடமிருந்து நியமனத்தை பெற்றுக் கொண்ட போது.

# தேசிய உற்பத்திக்கு பங்களிக்கும் வகையில் உற்பத்தி சங்கங்கள் செயற்பட வேண்டும்

## பிரதேச செயலாளர் அப்துல் லத்தீப்

பாலமுனை விசேட நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பல துறைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கம் அபிவிருத்தியை முற்றாக நிறுத்தி, உணவு உற்பத்தியிலும் உணவு பாதுகாப்பிலுமே விசேட கவனம் செலுத்தி வருகின்றது என நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவு, அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் (25) நிந்தவூர் அட்டப்பள்ளம் றிலக்ஸ் கார்டன் ஹோட்டலில் சங்கத்தின் தலைவர் ஏ.எல்.பதுறுதீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். அந்த வகையில் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிக்கும் வகையில் உற்பத்தி சங்கங்கள் செயற்பட வேண்டும். நாட்டில் தற்போது அரிசி நுகர்வு அதிகரித்துள்ளது இதனால் மக்களின் அரிசி தேவையை நிறைவேற்றுவதில் அரிசி ஆலை உரிமையாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

நகரமயமாக்கல் எனும் போர்வையில் அரிசி ஆலைகளை அண்டிய பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள் அமைந்து கொண்டிருக்கிறது. நகர மயமாக்கலினால் எதிர்காலத்தில் சில துறைகள் மூடவேண்டி ஏற்படலாம். எதிர்காலத்தில் அரிசி உற்பத்தியாளர்களுக்கு இது பெரும் சவாலாக அமையும் என நினைக்கின்றேன்.

## மூதூர் நீர்ப்பாசன திணைக்களத்தினால் நதிகள் தின விழிப்பூட்டல்

மூதூர் தினகரன் நிருபர்

உலக நதிகள் தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச நீர்ப்பாசன திணைக்களத்தின் ஏற்பாட்டில் மூதூர் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் விழிப்பூட்டல் கருத்தரங்கு இன்று (29) மூதூர் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூதூர் பிரதேச நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் எஸ்.ராஜ்குமார் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. 'ஒரு நதிகள் எல்லா மாற்றத்தையும் உண்டாக்கும்' எனும் தலைப்பில் அரச ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமும் பொறியியலாளரினால் அளிக்கப்படவுள்ளன.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி ஆரையம்பதியில் கையெழுத்து சேகரிப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை நீக்கக் கோரி நாடு தழுவிய ரீதியில் பொதுமக்களிடம் கையெழுத்துச் சேகரிக்கும் ஊர்த்திவழிப் போராட்டம் நேற்று (28) மண்முனைப் பற்று ஆரையம்பதி பொதுச் சந்தையின் முன்பு நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி ஏற்பாடு செய்திருந்த காங்கேசன்துறையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையிலான ஊர்த்தி வழி கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வின் தொடராக இடம் பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோண் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.

கையெழுத்துக்களைச் சேகரிக்கும் பணியில் மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கே.எல்.சுபையிருக்கு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் செயற்றிட்ட தவிசாளருக்கான நியமனக் கடிதத்தினை பேரவையின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ ஹமீட் வழங்கி வைப்பதையும் அருகில் பேரவையின் போசகர் றஸ்லான் மௌலான, பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் பராஸ் பாறூக், தேசிய பொருளாளர் எம்.என்.மிப்ராஸ் நிற்பதையும் காணலாம்.

(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

## தேசிய தொழில் தகைமை; காரைதீவில் விழிப்புணர்வு நிகழ்வு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

தொழில் பயிற்சி அதிகாரசபை காரைதீவு பயிற்சி நிலையத்தினால் முன் கற்றல் அங்கீகாரம் (RPL) முறையினூடாக தேசிய தொழில் தகைமை தரம் 4 சான்றிதழ் எவ்வாறு பெறுவது என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு காரைதீவுப் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது அதிகாரிகளினால் சான்றிதழை பெற தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி நெறியை கற்றுக் கொண்டிருப்பவர்கள் (6 மாதமாக), தொழில் செய்து கொண்டிருப்பவர்கள், வியாபாரத்தை பதிவு செய்து நேரடியாக தொழிலில் ஈடுபடுபவர், 1 1/2 வருட அனுபவம் தொடர்ச்சியாக இருப்பவர்கள், வெளிநாடு சென்று வந்தவர்களுக்கு வாய்ப்பும், திறமையும் அதிகம் போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

# பொருளாதார வளர்ச்சிக்கு பல்கலையும் பங்களிப்பு வழங்க வேண்டும்

ஒலுவில் விசேட நிருபர்



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்கலைக்கழகங்கள் பங்களிப்பு வழங்க வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

'இஸ்லாமிய மற்றும் அரபுக் கற்கைகள் ஊடாக சமூகபொருளாதார அபிவிருத்தி' எனும் தொனிப் பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் 09வது சர்வதேச ஆய்வு மாநாடு (28) தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உறையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர் தலைமையில் நடைபெற்ற இவ்வாய்வு மாநாட்டில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் ஏற்பட்ட கொவிட்19 தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர். நாட்டின் பொருளாதாரம் தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றது கடந்த காலங்களில் நாட்டு மக்கள் உர பிரச்சினை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு முக்கொடுத்திருந்தனர்.

தற்போது அவை சீர் செய்யப்பட்டு சாதாரண நிலைக்கு திரும்பியுள்ளது.

பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற போது நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு எவ்வாறான தீர்வினை வழங்க வேண்டுமென ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கணித முகாம்

காரைதீவு குறூப் நிருபர்



கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜெம் செயத்திட்டத்தின் கீழ் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கணித முகாம் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் வண. அருட்சகோதரர் சந்தியாகு செபமாலை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக பிரதிக் கல்வி பணிப்பாளர் ஆ.சஞ்சீவன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து

ஓய்வு பெற்ற கணித பாட உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன், கணித பாட ஆசிரியர் ஆலோசகர் ரி.கிருணிவாசன் மற்றும் கணித பாட ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அம்சமாக மாணவர்களின் நான்கு வகையான கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.மேலும், ஓய்வு பெற்ற கல்முனை வலய கணித பாட உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன் ஆற்றிய சேவைக்காக கல்லூரியால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.



# மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய விழா -2022

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும் இணைந்து நடாத்தும் 2022 ஆம் ஆண்டிற்கான மாவட்ட இலக்கிய விழா மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் (27) செவ்வாய்க்கிழமை மிகச் சிறப்பாக இடம் பெற்றது. மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்விற்கு அதிதிகளாக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மாவட்ட எழுத்தாளர் சங்க தலைவர் கலாநிதி முருகு தயாநிதி மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம்.ஏ.சீ. ஜெய்னுலாப்தீன் உள்ளிட்ட மேலும் பல அதிகாரிகளும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மூவினங்களின் பாரம்பரியம், தொன்மை மற்றும் பல் மத கலாசார வெளிப்பாடுகள், விழுமியங்களை வெளிப்படுத்தும் பண்பாட்டு கலை கலாசார, இலக்கிய நிகழ்வுகள் இதன்போது அரங்கேற்றப்பட்டன.

இதன் போது இலக்கிய விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள், இளைஞர்கள், கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் இதன்போது அதிதிகளினால் பாராட்டி நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தேயிலை மலைகளில் கருப்பந்தைலம் மரங்களை நடுவதற்கு தொழிலாளர்கள் எதிர்ப்பு

உடப்புஸல்லாவை எனிக் மேற்பிரிவு தோட்டத்தில் தேயிலை மரங்கள் பயிரிடக்கூடிய மலைகளில், கருப்பன்டெயில் மரக்கன்றுகளை நடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.



எனிக்தோட்ட தொழிலாளர்களே இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இம்மலைகளில், கருப்பந்தைலம் மரக்கன்றுகள் நடுவதை நிறுத்தாவிட்டால் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக தொழிற்சங்க போராட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக எனிக்தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளதாவது, இத்தோட்டத்தில் தேயிலை தொழிலை வாழ்வாதாரமாக நம்பி சுமார் எழுபது தொழிலாளர்கள் வாழ்கின்றனர்.

எனவே, தேயிலை உற்பத்தியையே நிர்வாகம் ஊக்குவிக்க வேண்டும். மாறாக தேயிலை மலைகளில் கருப்பன்டெயில் மரங்களை நடுவது தொழிலாளர்களின் வயிற்றில் அடிப்பதற்கு சமமானது.

அதிக இலாபத்தை ஈட்டும் நோக்கில் இச்செயலில் இறங்குவதை வன்மையாக கண்டிக்கிறோம். இலக்கம் 12 A, மற்றும் இலக்கம் 15 ஆகிய 16 ஹெக்டேயர் தேயிலைகளில் கருப்பந்தைலம் மரக்கன்றுகளை நடுவதற்கு நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தில் இம்மரக்கன்றுகளை நடுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை தொழிலாளர்கள் நிராகரித்துள்ளனர்.

இந்த நிலங்களில், மீண்டும் தேயிலை கன்றுகளை மீள் நடுகைகள் செய்ய வேண்டும் என்பதே தொழிலாளர்ளின் விருப்பம். தோட்ட நிர்வாகத்திற்கு தொழிலாளர்கள் இதை உணர்த்தியும் உள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் உடப்புஸல்லாவை பிரதேச தொழிற்சங்க காரியாலயங்களிலுள்ள மக்கள் பிரதிநிதிகளிடம் வினவப்பட்டது.

மரம் நடுகை தொடர்பில் கம்பனியிடமே பேசித் தீர்வு பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து இவ்விடயத்தை, இ.தொ.காவின் உயர் மட்டத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

(ஆ.ரமேஸ்)

# சம்பள அதிகரிப்பு கோரிக்கையை ஏற்காவிடின் நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

தோட்ட சேவையாளர்கள் கோருவது போன்று அவர்களுக்கு 25 வீத சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென, முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தோட்டசேவையாளர்கள் சங்கம் மற்றும் முதலாளிமார் சம்ளேனத்துக்கிடையில் நடாத்தப்பட்ட இரண்டு சுற்றுப்போச்சுவார்த்தையின் பின்னரே, முதலாளிமார் சம்மேளனம் இதைத் தெரிவித்துள்ளது. இதனால் அதிருப்தியடைந்த தோட்டசேவையாளர்கள், வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளத்தை அதிரிக்குமாறு டெலிமெயில் (தொலைஅஞ்சல்) போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன் பின்னரும் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின், எதிர்வரும் முதலாம் திகதி (01.10.2022) தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம் நடாத்தப்படும் என தோட்ட சேவையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை லோகி பெரிய மல்லியப்பு பிள்ளையார் ஆலயத்திலிருந்து இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகுமெனவும் தோட்ட சேவையாளர் சங்கத் தலைவர் வன்னியராச்சி மற்றும் பொதுச்செயலாளர் ரொபட் பிரான்சீஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோட்ட சேவையாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாழ்வாதாரத்துக்கேற்ப சம்பளத்தை உயர்த்து' என்ற செய்தியை முதலாளிமார் சம்மேளனத்திற்கு தெரியப்படுத்துவதே இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கமென்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தோட்ட சேவையாளர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட ஏனைய நலன்புரி விடயங்கள் உள்ளடங்கிய புதிய கூட்டு ஒப்பபந்தம் தொடர்பாக இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம், முதலாளிமார் சம்மேளனத்துக்கிடையில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடின்றி முடிந்த நிலையிலே, ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தம், இம்மாதம் 30.09.22 முடிவடைவது குறிப்பிடத்தக்கது.

# சமுர்த்தி அதிகாரியை தாக்கிய பெண்கள் இருவர் பொலிஸாரால் கைது

(எம்.ஏ.அமீனுல்லா )

பேராதனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொடபொல கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தரை, தாக்கிய சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விருவரும் கடந்த (26) திங்கட்கிழமை கைதாகினர்.

சமுர்த்தி உத்தியோகத்தரான நியமகாரம்யா குமாரி தனசேகர என்பவரே (58) அவரது அலுவலகத்தில் வைத்து இந்த தாக்குதலுக்குள்ளானார். இதில் காயமடைந்த அவர், சிகிச்சைக்காக பேராதனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதலை நடாத்தியதாகச் சந்தேகிக்கப்பட்ட இரண்டு பெண்களும் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வந்த வேளையில் கைதாகினர். அரச உத்தியோகத்தரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இக்கைது இடம்பெற்றது. 50 மற்றும் 30 வயதுடைய கொடபொல பிரதேச இப்பெண்கள், உத்தியோக பூர்வ பணிகளுக்காக சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்றபோது, சமுர்த்தி உத்தயோகத்தருடன் முறுகல் ஏற்பட்டது. இதையடுத்தே சமுர்த்தி அதிகாரி தாக்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.





மாத்தளை ஆமினா மகளிர் தேசியக் கல்லூரியின் 60 வருட பூர்த்தியை (வைரவிழா) முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.இதற்கமைவான பசுமை தின நிகழ்வு, அதிபர் சிராஜுதீன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கல்லூரி வளவில் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்வுகளும் நடைபெற்றன.

(படங்கள், மாத்தளை சுழற்சி நிருபர்)


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

113

**சுசூகி கார்கள்** விற்பனைக்கு

WP CBH-3472 Suzuki Alto, 2016, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714 5 42 958 . 057003

118

**ஜீப்புகள், பிக்கப்புகள்** விற்பனைக்கு

WP CAO-2795 Nissan X-trail, 2015, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 057000

119

**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

NC DAF-7283 Tata Ace, 2017 கூடிய விலை க் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 056996

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

WP AAX-9076 Bajaj, 2015 Threewheel, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 056998


## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### சுத்திகரிப்புச் சேவைகள் நடாத்திக் கொண்டு செல்வதற்கான கேள்வி கோரல் - 2022/2023

**ஒப்பந்த இலக்கம்: IR/PAM/22/2022-2023**

- கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் 17 மாடிகளைக் கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடம்
- கொழும்பு-02, பாலதக்ஷ புதிய கட்டிடம்
- நவம் மாவத்தை, 100ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இரண்டு மாடிகளைக் கொண்ட உள்நாட்டு இறைவரி நவம் மாவத்தை பிரதேச அலுவலக கட்டிட இடப்பரப்பு
- ஜாவத்த (கொழும்பு நகர) பிரதேச அலுவலகம்
- இல. 533, விஜேராம மாவத்தை சந்தி, கங்கொடவில, நுகேகொடயில் அமைந்துள்ள மஹரகம நகர அலுவலகம்,
- இல. 714, வக்வெல்ல வீதி, காலியில் அமைந்துள்ள 04 மாடிகளைக் கொண்ட பிரதேச அலுவலகக் கட்டிடம்
- மாத்தறை 03 மாடிகளைக் கொண்ட பிரதேச அலுவலகம்
- கம்பஹா 03 மாடிகளைக் கொண்ட பிரதேச அலுவலகம்
- குருநாகல் பிரதேச அலுவலகம் மற்றும் தரவு திருத்தங்கள் நிலையம்
- கண்டி பிரதேச அலுவலகம்
- நீர்கொழும்பு பிரதேச அலுவலகம்
- இரத்தினபுரி பிரதேச அலுவலகம்
- யாழ்ப்பாண பிரதேச அலுவலகம்
- நுவரெலியா பிரதேச அலுவலகம் மற்றும் நுவரெலியா சுற்றுலா பங்களா
- மாபிட்டிய, கேகாலை பிரதேச அலுவலகம்
- இல. 42, குருநாகல் வீதியில் அமைந்துள்ள தம்புல்ல பிரதேச அலுவலகம்
- இல. 17, உதயராஜ மாவத்தையில் அமைந்துள்ள பதுளை பிரதேச அலுவலகம்
- வங்கி பிளேஸ் அனுராதபுரம் பிரதேச அலுவலகம்,
- இல. 275, பவுன்டரி வீதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு பிரதேச அலுவலகம்
- களுத்துறை தெற்கில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச அலுவலகம் மற்றும்
- நாராஹென்பிட்டி மெஹெவெர பியஸயில் அமைந்துள்ள அலுவலகங்களுக்கு 2022-12-01ஆம் திகதி முதல் ஒரு காலத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகள் நடாத்திக் கொண்டு செல்வதற்காக கீழ்க் காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்களிடமிருந்து மட்டும் கொழும்பு 02, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022-10-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

01. I. வியாபாரப் பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல்.
    II. அரசாங்கத் துறையில் / தனியார் துறையில் ஆகக் குறைந்தது 05 வருட திருப்திகரமான அனுபவம் இயைபுடைய துறையில் இருத்தல். (ஆகக் குறைந்தது 20 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.)
    III. ஆகக் குறைந்தது 75 ஊழியர்களைக் கொண்ட பணியாட்கள் குழுவொன்று இருத்தல். (கடந்த 12 மாதங்களில் அவர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்படும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (ஈ.பீ.எப்., AR 'B' படிவம்)
    IV. சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படும் மின்சார மற்றும் ஏனைய உபகரணங்கள் (தரை மெருகூட்டும் கருவி, தூசு அகற்றும் இயந்திரம் ஆகியன) நிறுவனத்திற்கு உரியதாக இருத்தல்.
    V. (கவனிக்கவும்: விண்ணப்பப் படிவத்துடன் மேலே இலக்கம் I தொடக்கம் V வரை தகுதிகள் காண்பிக்கப்படும் உரித்துடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)
02. 2022-09-29ஆம் திகதி தொடக்கம் 2022-10-19ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்தின் 15ஆவது மாடியில் பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவில் இருந்து உரித்துடைய கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. 2022-10-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அவர்களிடம் கேள்விதாரரின் கடிதத் தலைப்பொன்றில் எழுத்து மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளப்படும் மாதிரிப் படிவத்தில் மட்டும் கேள்விகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த மாதிரிப்படிவங்கள் பெற்றுக் கொள்வதற்காக மீளச் செலுத்தப்படாத 5000.00 ரூபாவை இந்தத் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவுக்குச் செலுத்திய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விதாரர் தமது கேள்வியுடன் ரூபா 415,000.00 (நான்கு இலட்சத்து பதினையாயிரம் பெறுமதியான இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு கோரப்படும்போது செலுத்தப்படும் கேள்விப் பிணை முறி / வங்கிப் பிணை முறி அல்லது அந்தப் பெறுமதிக்கு மீளச் செலுத்தப்படும் கேள்வி வைப்புத் தொகையொன்றை "உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்" பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை 2022-10-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தின் 15ஆம் மாடியில் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுத்திகரிப்புச் சேவைகள் வழங்கல் - 2022/2023' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
06. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததும் உடனடியாக அதாவது 2022-10-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு உள்நாட்டு இறைவரி கட்டிடத்தின் 15ஆம் மாடியில், ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
07. மேலும் விபரங்கள் தேவையாயின் அந்த விபரங்களை இந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் (பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
08. தொலைபேசி இலக்கம்:

| | |
|---|---|
| ஆணையாளர் | - 011 2135461 |
| நிர்வாக உத்தியோகத்தர் | - 011 2135462 |
| பிரதான முகாமைத்துவ சேவை உதவியாளர் | - 011 2135345 |

**பாரிய அளவிலான பெறுகைக் குழுத் தலைவர்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

## விலைக்கோரலுக்கான அழைப்பு

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகர அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் (கீழ்நிலை) அழைக்கின்றார்.

**அட்டவணை -01**

| விலைக் கோரல் இல. | திட்டத்தின் பெயர் | வெட் வரியின்றி வேலையின் மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | விநியோகக் காலம் (நாட்கள்) | தேவையான CIDA பதிவுத் தரம் | விலைக் கோரல் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஹேனமுல்லயிலுள்ள ரன்திய உயன வீடமைப்புத் திட்டத்தில் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் உத்தேச நவீனப்படுத்தல் வேலைகள்- கட்டம் 2 PD/UDA/ HENAMULLA/ EWSS/2022/024 | 17,000,000.00 | 4,500.00 + வெட் | 170,000.00 | 90 | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை விசேடத் துவத்துடன் C6 தரம் | 2023 பெப்ரவரி 02ஆம் திகதி வரை |

01. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் நடாத்தப்படும்.
02. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்குட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனைய தேவைப்பாடுகள் விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ''செத்சிறிபாய - படிநிலை 1'' 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைக்கான தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022 செப்டெம்பர் 29ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 19ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெறுகைக்கான தலைவரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவு சிறாப்பருக்கு செலுத்துவதன் பேரிலும் செப்டெம்பர் 29ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 19ஆம் திகதி வரையில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் பத்தரமுல்லை, செத்சிறிபாய - படிநிலை 1, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவு, பெறுகைக் குழுத் தலைவருக்கு செலுத்தி எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரரும் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் மற்றும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கி / நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் (CGF) வழங்கப்பட்டதும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரக்குறிப்பின் பிரகாரம் வங்கி உத்தரவாதமொன்றை விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுக்களுடன் இணைத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறித் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் என்பன 01ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகவும் அது நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தலும் வேண்டும்.
06. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் 2022 ஒக்டோபர் 20ஆம் திகதி மு.ப. 11.30 அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் மாடி, செத்சிறிபாய - படிநிலை 1, பத்தரமுல்லை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 ஒக்டோபர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்லை, செத்சிறிபாய - படிநிலை 1, 7ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு திட்டவட்டமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
08. விலைமனுதாரர்களைத் தெரிவு செய்கையில் விலைமனுதாரர்களின் முன்னைய செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைமை என்பன திட்டவட்டமாக மதிப்பீடு செய்யப்படும். மோசமான செயற்பாடுகளைக் கொண்ட விலைமனுதாரர்கள் எந்தவொரு விலைக்கோரல் கையளிப்பின் பொருட்டும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.
09. விலைக்கோரல் ஆவணங்கள் தயாரித்தல் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை எவ்விதப் பொறுப்பும் கூறப்படமாட்டாது மேலும் கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் பொருத்தமான எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் (கீழ்நிலை) தன்னகத்தே கொண்டுள்ளார். திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரின் (கீழ்நிலை) தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் நிலை),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**7ம் மாடி, 'செத்சிறிபாய-படிநிலை 1',**
**பத்தரமுல்ல.**

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# மின் விநியோகத் தடை

LECO

பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் நிமித்தம் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுவான மின்சாரத் தடைக்கான நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையாகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பகுதிகளுக்கான நேரங்கள் வெவ்வேறாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

## 2022 ஒக்டோபர் மாதத்திற்கான மின்சாரத் தடை அட்டவணை

### திகதிகள் மற்றும் மின் கம்பியிணைப்புள்ள இடங்கள்

## காலி

1 **ஒக். 02, 16**
கிரிப்ஸ் வீதி, ஸ்டீல் வீதி, ஜிப்ரியா மாவத்தை, சரணங்கர வீதி, எலியட் வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 02, 16, 27**
வக்வெல்ல வீதி, ஹூமெஸ் வீதி, மினுவங்கொட, எலியட் வீதி (பகுதி), அலபலாவ வீதி, கந்தேவத்த வீதி (பகுதி), குணரத்ன மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 12 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**
பியத்திகம, ஜின்தொட்ட, கொழும்பு வீதி (பகுதி), போபே வீதி, தாதெல்ல குறுக்கு வீதி, வெலிபிட்டிமோதர, சுதர்மாராம மாவத்தை, கோவில மாவத்தை, ஜின்தொட்ட, IDH வத்த மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 12**
தன்கெதர வீதி, ஹிரிம்புர வீதி, ஸ்டீல் வீதி, செனரத்கடே சந்தி, மல்வத்த டெம்பல் வீதி, சமகிவத்த, பெலிகஹ சந்தி, ஜயவர்தனாராம வீதி, டொனால்ட் ஜேன்ஸ் மற்றும் கிளை வீதிகள்

5 **ஒக். 13**
ஹூமெஸ் வீதி, விஸ்கம் வீதி, தேவசுரேந்திர மாவத்தை, வக்வெல்ல வீதி (பகுதி), கல்வடுகொட, விமலசுரேந்திர மாவத்தை, டெம்பள் வீதி, கந்தேவத்த வீதி, ரிச்மண்ட் ஹில் வீதி, ஹீன்பென்டெல்ல வீதி (பகுதி), பேதுருவல சந்தி, ஓசானாகொட வீதி, போபே குறுக்குத் தெரு, தஹநாயக்க மாவத்தை, பன்கஹலங்கார மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

6 **ஒக். 13, 27**
அலபலாவ வீதி, எலியட் வீதி, சங்கமித்த ஒழுங்கை, மடபாத்த 2ஆம் ஒழுங்கை, வக்வெல்ல வீதி (பகுதி), ஹூமெஸ் வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

7. **ஒக். 26**
தன்கெதர வீதி, ஹிரிம்புர வீதி, ஜிப்ரியா வீதி, சரணங்கர வீதி, ஸ்டீல் வீதி, செனரத்கடே சந்தி, கிரிப்ஸ் வீதி, மல்வத்த டெம்பல் வீதி, சமகிவத்த, பெலிகஹ சந்தி, ஜயவர்தனாராம வீதி, டிக்சன் வீதி (பகுதி), மடபாத்தல வீதி, மேதானந்த மாவத்தை, டொனால்ட் ஜேன்ஸ் வீதி மற்றும் கிளை வீதிகள்

8. **ஒக். 26**
கன்னம்பிட்டிய வீதி, எச்.கே. எட்மன்ட் மாவத்தை, சேர்கியலர் வீதி, மொரிஸ் வீதி, பண்டாரநாயக்க மாவத்தை, கோன்கஹ வீதி, தனிபொல்கஹ 1ம் ஒழுங்கை, மொஹிதீன்வத்த, மலித்துவ புதிய ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

9. **ஒக். 27**
வக்வெல்ல வீதி, புன்கசார மாவத்தை, ஹெவ்லொக் வீதி, சைனா கார்டன், விளையாட்டு மைதான வீதி, காமினி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## ஹிக்கடுவ

1 **ஒக். 07 மு.ப. 9.00 முதல் பி.ப. 1.00 வரை**
பள்ளியபிட்டிய, பாலம்கொட வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 12 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதி ஜிந்தோட்ட பாலத்திலிருந்து பூஸா இராணுவ முகாம் சந்தி வரை, கடுருப்பே வீதி, கந்தல வீதி, கே.யூ.டி. மாவத்தை, வத்துராவில வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 26 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
வேவல மில்ல வீதி, காலி வீதியில் கொரல் கார்டன் ஹோட்டலிலிருந்து குமாரகந்த சந்தி வரை, நரிகம, வீ.சீ. வீதி, லீனவத்த, வேவல்கொட வீதி, பன்னன்கொட வீதி, மில்ல வீதி (பகுதி), கொஹூஅம்பே வீதி மற்றும் கிளை வீதிகள்

## அம்பலாங்கொட

1 **ஒக். 04, 18**
வத்துகெதர, சீனிகொட, ஹீனெட்டிய வீதி (பகுதி), பத்திவத்த, டி.ஏ.கே டி சில்வா மாவத்தை, விஹாரகொட, வடுமுல்ல, கந்தேகொட, கெரமினிய வீதி, நாகஹ டெம்பிள் வீதி, தொட்டவத்த வீதி, எல்பிட்டிய வீதி, மஹகராவ வீதி, குருந்துவத்த வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 25 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பட்டபொல வீதி, பண்டாரவத்த, ஹெட்டிகொட, ஸ்டேஷன் வீதி, தேவாவ வீதி, மீட்டியாகொட வீதி, மஹவெல்ல, கொடகம, தேவத்த, சமகி மாவத்தை, கல்துவ வீதி, நாகஸ்கந்த, நாகஸ்வத்த, எப்பிட்டிமுல்ல, தல்கஸ்கொட, வேரகொட, டெல்மார் கொலனி, டட்லி சேனாநாயக்க மாவத்தை, பாசெல் மாவத்தை, டொலேவத்த, விஜயபாபுர, ஹரன்னாகல, உடவேரகொட வீதி, தூவ வீதி, பராபே, நுருகல மற்றும் கிளை வீதிகள்

## களுத்துறை

1 **ஒக். 04**
மொரன்துடுவ வீதி (பகுதி), சேர்கியுலர் வீதி (பகுதி), பஸ்மன் சந்தி, மத்திய வீதி, திப்பெத்த வீதி, ஹேனதொட்ட, உடுகல்ல வீதி, தலதாவத்த வீதி மற்றும் ஒழுங்கை, காமினி வீதி, வேரகம வீதி, கொஹூமோல வீதி, அல்விஸ் பெர்னாண்டோ மாவத்தை, கெக்குணதொட்ட வீதி, கங்காராம வீதி, போதிராஜ மாவத்தை, குணதிலக்க வீதி, சேர்கியுலர் வீதி, மெத்தானந்த மாவத்தை, கோணகஹ வீதி, மொரத்துவ வீதி, மஹவிகார வீதி, டெம்பள் ஒழுங்கை, ஹபரகஹலந்த வீதி, விஜய வீதி, மயான வீதி, ஆரியவன்ச மாவத்தை, திஸ்ஸ வீதி, வித்யால வீதி, ஸ்ரீ லங்காராம வீதி, அல்பர்ட் குணதிலக்க வீதி மற்றும் கிளை வீதிகள்

## பயாகல

1 **ஒக். 05 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதி (பகுதி), மகல்கந்த, ஜனராஜபுர, அளுத்ஹேன, புபுலவத்த, புபுலந்த லேன்ட் சேல், அம்பலன்பொல, சாம மாவத்தை, குருந்துவத்த, மரக்கலவத்த, ஹேன வீதி, ரொக்லன்ட் வீதி, பெர்னாண்டோ பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

## அலுத்கம

1 **ஒக். 10 மு.ப. 8.00 முதல் பி.ப. 5.00 வரை**
சென் ஆன்ஸ் வீதி, நளீம் ஹாஜியார் மாவத்தை (பகுதி). பெரேரா வீதி (பகுதி), கப்பிதான்கொட வீதி (பகுதி), நவுபர் மாவத்தை, கரந்தகொட வீதி, கல்பொத்த வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 10 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
கந்தேவிஹார வீதி, காலி வீதி (பகுதி), லங்கா பிரின்ஸ் வீதி, ஈடன் ஹோட்டல் வீதி, பாபரின் வீதி, மருதானை வீதி, ஹெட்டிமுல்ல வீதி, மஹகொட மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 17 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பழைய வீதி (பகுதி), மருதானை வீதி, பேரு ஹோட்டல் வீதி, கொன்பிபி ஹோட்டல் வீதி மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 31 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதியிலிருந்து அலுத்கம பொலிஸ் நிலையம் வரை, பெந்தோட்டை பாலம், கனேகம வீதி (பகுதி), புகையிரத நிலைய வீதி, கனேகொட வீதி, வெலிப்பன்ன வீதி (பகுதி), வைத்தியசாலை வீதி, மத்துகம வீதி (பகுதி), ரெயில்வே அவன்யூ, சாவியா வீதி. லோட்டஸ் வீதி, ஸ்ரீபத்தி வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## மொரட்டுவ

1 **ஒக். 04 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
எம்.ஜே.சி. பர்னாந்து மாவத்தை, சார்ள்ஸ் சொய்சா பிளேஸ் (பகுதி), கந்தலன 2ஆம் மற்றும் 3ஆம் ஒழுங்கைகள், கல்பிட்டஹாகொட வீதி, சென் அன்தனீஸ் வீதி, மெட்டிகந்த வீதி, புலக்கஹதொட்டுபொல வீதி, ரஸ்கின் பர்னாந்து மாவத்தை, சல்கஹா வீதி, ஆலோக்கபிட்டிய வீதி, கோவில வீதி, பெர்ரி ஒழுங்கை, இஹல இந்திபெத்த வீதி, 6ஆம் ஒழுங்கை, ஹை ஸ்கூல் வீதி, கட்டுபிட்டிய வீதி, சேவா ஒழுங்கை, மொரட்டுமுல்ல தெற்கு, ஹமுதா மாவத்தை, அலோக்கபிட்டிய வீதி, ஸ்ரீ பிரேமரத்ன மாவத்தை, பஹல இந்திபெத்த வீதி, பம்மட்டுவ வீதி, தீப்பானந்த வீதி, தீப்பானந்தபுர, ஹை ஸ்கூல் வீதி (பகுதி), பண்டாரநாயக்க மாவத்தை, எட்வர்ட் ஒழுங்கை (பகுதி), சுதர்மாராம மாவத்தை மற்றும் ஒழுங்கை, சுகுணானந்த மாவத்தை, பிரஜாசாலாவ மாவத்தை, சங்கமித்த வீதி, 3ம் ஒழுங்கை, பெசிலியா வீதி, ஜுபிலி வீதி, பெல்மோரிய வீதி, ஜுபிலி வீதி, இஹல இதிபெத்த (பகுதி), ஜோன் சாமுவெல் மாவத்தை, குரே ஒழுங்கை வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 11 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
மொரட்டுமுல்ல பிளேஸ், பிரேமரத்ன வீதி (பகுதி) ஆனந்தாராம வீதி (பகுதி), ஜயசிரி மாவத்தை, சொய்சா வீதி, ஹேனவத்த வீதி, ஆரியவன்ச மாவத்தை (பகுதி), ரோசமல்கொட்டுவ வீதி, ஜோன் டி சில்வா வீதி, தபசராம வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 18 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
புதிய காலி வீதி (பகுதி), வொட்சன் பீரிஸ் மாவத்தை, ஸ்டேசன் வீதி, டி மெல் ஒழுங்கை, வீரபுரன்னப்பு ரஜ மாவத்தை, கோல்விஸ் மாவத்தை, உஸ்வத்த 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், உஸ்வத்த சேர்கியுலர் வீதி, மொரட்டுவெல்ல, பிரன்சிஸ்கோ ஒழுங்கை, செபஸ்தியன் மாவத்தை, முராவத்த, பிரேசர் மாவத்தை, பர்னாந்து மாவத்தை, தெல்கஹவத்த, சென் பீட்டர்ஸ் வீதி மற்றும் ஒழுங்கை, 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், பி.எம். பர்னாந்து மாவத்தை, பி.எம். பர்னாந்து மாவத்தை 2ம், 3ம், 4ம், 5ம் மற்றும் 6ம் ஒழுங்கைகள் மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 20 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
காலி வீதி (பகுதி), சுரம்யா பிளேஸ், டி மெல் வீதி, மொடல் டவுண், மொடல் அவன்யூ, கார்டன் சிட்டி, ராகுல மாவத்தை (பகுதி), பண்டாரநாயக்க மாவத்தை (பகுதி), கட்டுபெத்த சந்தி, ராகுல மாவத்தை (பகுதி), ராகுல மாவத்தை 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் ஒழுங்கைகள், தேவால வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **ஒக். 20 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பீ.பி. அல்விஸ் பெரேரா மாவத்தை, சுரம்யா பிளேஸ், சுசிறி பிளேஸ், பிரஜாசாலாவ வீதி, ஆசிரி உயன, அரலிய பிளேஸ், சமன் பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

## கெசெல்வத்த

1 **ஒக். 04 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
சந்திரவக்க வீதி, தொட்டுபொல வீதி, சுகந்த ஒழுங்கை, சமகி மாவத்தை, சாவியா வீதி, அஜ்மீர் மாவத்தை, பாசெல் மாவத்தை, காலி வீதியில் பள்ளிமுல்ல சந்தியிலிருந்து சரிக்கமுல்ல சந்தி வரை, ஆதம் பொரஸ்ட் (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## நுகேகொட

1 **ஒக். 04 பி.ப 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
ஹைலெவல் வீதியில் விஜேராம சந்தியிலிருந்து கன்சபா சந்தி வரை, வனாத்த வீதி (பகுதி), விஜேராம ஒழுங்கை (பகுதி), மீகஹவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 07 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**
குவாரி வீதி, புவனேகபா வீதி, மயான வீதி மற்றும் கிளை வீதிகள்

## பொரலெஸ்கமுவ

1 **ஒக். 06 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
கொழும்பு வீதியில் திவுல்பிட்டிய சந்தியிலிருந்து பெப்பிலியான வரை, டெம்பிள் வீதி, விஹார மாவத்தை, மயுர மாவத்தை, சோமரத்ன மாவத்தை (பகுதி) போதிராஜ மாவத்தை, பெப்பிலியான சந்தி, பெப்பிலியான ஒழுங்கை, சூரியமல் மாவத்தை, ஹிக்கஹவத்த, வீரசேக்கர மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 12**
கொழும்பு வீதியில் ஜீ. எச். பெரேரா மாவத்தை, பழைய கெஸ்பாவ வீதி, ரத்தினபிட்டிய வீதி (பகுதி), 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், கொவிகம் பிளேஸ், பெரேரா மாவத்தை, திவுல்பிட்டிய மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 13 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**
அபேரத்ன மாவத்தை, மயான வீதி, பிட்டவல வீதி, 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், அம்பவத்த, கொழும்பு - பிலியந்தலை வீதி (பகுதி), பாசெல் மாவத்தை, (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 18 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**
கொஹிலகொட்டு வீதி (பகுதி), வீதியபண்டார வீதி, நீலம் மஹர வீதி, யஹம்பத் மாவத்தை, சுது மாவத்தை, ஜய மாவத்தை, மீகஹவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **ஒக். 19 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
லேக் வீதி, பரோபகார மாவத்தை (பகுதி), ஜய மாவத்தை, தல்கஸ்வத்த வீதி, ஓ.பீ. பெரேரா மாவத்தை, ரெந்தவத்த வீதி, சமரபால மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

6 **ஒக். 20**
பழைய கெஸ்பேவ வீதி, இறப்பர்வத்த வீதி, 1ஆம் மற்றும் 2ஆம் ஒழுங்கைகள், அந்திரிஸ் மாவத்தை, சூரியமல் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

7 **ஒக். 27 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
கெம்பஸ் வீதி, ஜீ.எச். பெரேரா மாவத்தை, ரத்தனபிட்டிய 1ஆம் ஒழுங்கை, பழைய கெஸ்பாவ வீதி (பகுதி), சோதர மாவத்தை (பகுதி), ஸ்ரீ பேமானந்த மாவத்தை, டெம்பள் வீதி, மெத்செவன மற்றும் கிளை வீதிகள்

## பிட்டகோட்டே/ வெலிக்கட/ ராஜகிரிய

1 **ஒக். 05 பி.ப 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
ராஜகிரிய வீதி, மதின்னாகொட வீதி, சில்வன் ஒழுங்கை, தர்மபால பிளேஸ், யூ.ஈ. பெரேரா மாவத்தை, எஸ். டபிள்யூ. பெரேரா மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
கோட்டே வீதியில் எத்துள்கோட்டே சந்தியிலிருந்து வெலிக்கட சந்தி வரை, புத்கமுவ வீதி, பழைய கோட்டே வீதி (பகுதி), குரே மாவத்தை, ஆட்டிகல மாவத்தை, பார்க் ஒழுங்கை (பகுதி), வெலிக்கட சந்தி மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
ஸ்ரீ ஜயவர்தனபுர வீதியில் எத்துள்கோட்டே சந்தியிலிருந்து வெலிக்கட சந்தி வரை, ரோயல் கார்டன் மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 20 ந.ப. 12.00 முதல் பி.ப. 5.00 வரை**
கமத்தவத்த வீதி, மெதவெலிகட வீதி, 1ஆம் ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

5. **ஒக். 26 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
கோட்டே வீதியில் 9ஆம் ஒழுங்கையிலிருந்து 2ஆம் ஒழுங்கை வரை (ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை), பங்களா சந்தி (பகுதி), தியவன்னா வீதி, கொலம்பதந்திரி மாவத்தை, ரம்பட் வீதி, அங்கம்பிட்டிய வீதி மற்றும் கிளை வீதிகள்

6. **ஒக். 27 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
கோட்டே வீதி (பகுதி), சரண மாவத்தை, தர்மபால பிளேஸ், யூ.ஈ. பெரேரா மாவத்தை, 4ஆம் ஒழுங்கை, வெலுபுள்ளிவத்த, சேரம் மாவத்தை, ஒபேசேக்கரபுர (பகுதி), மற்றும் கிளை வீதிகள்.

## கொலன்னாவ / வெள்ளம்பிட்டிய

1 **ஒக். 07**
கட்டுபெல்லெல (பகுதி), அம்பத்தலை – சேதவத்த வீதியில் கட்டுபெல்லெல சந்தியிலிருந்து கொஹிலவத்த சந்தி வரை, பிரண்டியாவத்த வீதி (பகுதி). சதஹம் மாவத்தை, டொனால் பெரேரா மாவத்தை, வென்னவத்த (பகுதி), கொஹிலவத்த (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 17**
மீத்தொட்டமுல்ல வீதி, பெரேரா மாவத்தை, வடுகொடவத்த, பன்சல்ஹேன (பகுதி), பன்சல்ஹேன வீடமைப்புத் திட்டம், விகார மாவத்தை (பகுதி), மீத்தொட்டமுல்ல சந்தி மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 17**
அவிசாவளை வீதியில் மீத்தொட்டமுல்ல சந்தியிலிருந்து பேஸ்லைன் வீதி சந்தி வரை, ஒருகொடவத்த, நவ கௌனிபுர, ராசம்மாகேவத்த, மஜீத் பிளேஸ், லூகஸ் வத்த, ஒருகொடவத்த சந்தைக் கட்டிடத் தொகுதி, குருனியாவத்த, கம்பிகொட்டுவவத்த மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 17**
ஒருகொடவத்த சந்தைக் கட்டிடத் தொகுதி, கம்பிகொட்டுவத்த, வெஹெரகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **ஒக். 17**
சாவத்த வீதி, ஸ்ரீ விமலாராம வீதி, அவிசாவளை வீதி (பகுதி), குமாரதாச பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

6 **ஒக். 17, 31**
அவிசாவளை வீதியில் வெல்லம்பிட்டிய சந்தியிலிருந்து புத்கமுவ வரை, அம்பகஹாவத்த வீதி, பிரண்டியாவத்த, மெகொட கொலொன்னாவ, வென்னவத்த, கொட்டுவில (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

7 **ஒக். 17, 21, 31 - 21ஆம் திகதி பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
அவிசாவளை வீதியில் மீத்தொட்டமுல்ல சந்தியிலிருந்து வெள்ளம்பிட்டிய சந்தி வரை, விஹார மாவத்தை (பகுதி), கொலன்னாவ வீதி (பகுதி), நாகஹவத்த, புவக்கஹவத்த (பகுதி), தொஸ்தரவத்த, கலன்சூரியவத்த, வெல்லம்பிட்டிய சந்தி, சங்கபோதி மாவத்தை, குமாரதாச பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

8 **ஒக். 21 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
கொலன்னாவ வீதி, நாகஹமுல்ல வீதி, பன்சல்ஹேன, மீத்தொட்டமுல்ல வீதி (பகுதி), விகார மாவத்தை (பகுதி), பராக்கிரம மாவத்தை, ஞானசிரி மாவத்தை, ஸ்ரீ விமலாராம வீதி, சாலமுல்ல (பகுதி), புவக்கஹவத்த (சிங்கபுர) மற்றும் கிளை வீதிகள்.

9 **ஒக். 31**
அவிசாவளை வீதியில் கொட்டிகாவத்தை சந்தியிலிருந்து புத்கமுவ சந்தி வரை, மஹபுத்கமுவ, டெம்பள் வீதி, பொல்கஹபிட்டிய வீதி, சித்திராகார வீதி மற்றும் கிளை வீதிகள்

## கொட்டிகாவத்த

1 **ஒக். 03, 31**
அவிசாவளை வீதி (பகுதி), கொட்டிகாவத்த சந்தி, பெலகம வீதி, நாகஹவெல வீதி, டீ.சி. வீதி (பகுதி), சரணங்கர வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
களனிமுல்ல, கித்சிறிமேவன் வீதி, அம்பத்தலை – சேதவத்த வீதி (பகுதி), பிரண்டியாவத்த, கொஹிலவத்த, வீரமல் மாவத்தை, தஹம்வெல வீதி, பியதிஸ்ஸி மாவத்தை, மஹபுத்கமுவ வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

## பேலியகொட

1 **ஒக். 18 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
தெலங்கபாத்த வீதி, கல்யாணி மாவத்தை, மீகஹவத்த, சுதர்மாராம வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 19**
கண்டி வீதியில் நுகே வீதி சந்தியிலிருந்து புகையிரதக் கடவை வரை, துட்டுகெமுனு மாவத்தை (பகுதி), ரஞ்சனி விமலாராம மாவத்தை, அசோக்காராம மாவத்தை, முருகன்வத்த, பட்டிய சந்தி, ஸ்டேஷன் வீதி, களனிதிஸ்ஸ மாவத்தை, கே.ஜீ. பீரிஸ் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## களனி

1 **ஒக். 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
நாரம்மினிய வீதி (பகுதி), வெரலுகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 19**
கண்டி வீதியில் களனி பல்கலைக்கழகத்திலிருந்து சுவர்ணமஹால் சந்தி வரை, லும்பினி வீதி மற்றும் ஒழுங்கை, சென் ஜூட் மாவத்தை, நாகஹவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

## மஹர

1 **ஒக். 05 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
குருகுலாவ வீதி (பகுதி), கிரிமெட்டியாகார சேர்ச் வீதி, புஷ்பாராம வீதி, சென் அந்தனீஸ் மாவத்தை, சிறிவர்தன வீதி, பஹலவத்த வீதி, சீவளி மாவத்தை, தெல்பே சந்தி, ராகம வீதி (பகுதி), சிறைச்சாலை வீதி, சதஹம் மாவத்தை, ரத்னபால மாவத்தை

2 **ஒக். 07 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
சிமொன் பிளேஸ், அல்விஸ் பிளேஸ், ஹரிஸ்சந்திர மாவத்தை, பாபனூர் கார்டன்ஸ், ராஜித்த வீதி, அசோக்கா பிளேஸ், மிஹிந்து மாவத்தை, சங்கராஜ மாவத்தை, வேவல்தூவ வீதி, கோட்டாபய மாவத்தை, பங்களவத்த, பண்டாரநாயக்க மாவத்தை, பாசெல் மாவத்தை, நாஹேன, பாதிலியத்துடுவ - ஹூணுப்பிட்டிய வீதி (பகுதி), தலுப்பிட்டிய வத்தளை வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 12 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
ராகம வீதியில் தெல்பே சந்தியிலிருந்து தேவானந்த வீதி வரை, TC வீதி, பியதிஸ்ஸ மாவத்தை, விஹார மாவத்தை, மங்கள மாவத்தை, நெலிகம, பஹல கரகஹமுன, ராகம – கடவத்தை வீதி (பகுதி), கிரிமெட்டியாகார வீதி, ஆசிரி மாவத்தை, பஹல கரகஹமுல, சாந்தி மாவத்தை, மெத வீதி (பகுதி), டெம்பள் வீதி, சென் அந்தனீஸ் மாவத்தை, கல்ரோத வீதி, ஜயசிங்க வீதி, மித்துருகெல மாவத்தை, கோப்பியவத்த, கோப்பியவத்த வீதி, கம்மெத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 17 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
தலுப்பிட்டிய வீதி, வெடிகந்த வீதி, அக்பர் டவுன், ரோஸ்விலா கார்டன்ஸ், பள்ளியவத்த, துட்டுகெமுனு மாவத்தை, என்டேரமுல்ல, நோர்டன் பிளேஸ், கோன்கஹவத்த, அரலிய கார்டன்ஸ், சமகி மாவத்தை, பெரகும்பா மாவத்தை, ஸ்ரீ ஜயந்தி மாவத்தை, ஜூம்மா மஸ்ஜித் வீதி, விஜயபா மாவத்தை, ஆனந்த மாவத்தை, குணானந்த வீதி, பராக்கிரம மாவத்தை, விஹார மாவத்தை, மயுர மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

5 **ஒக். 26**
கிரிபத்கொட வைத்தியசாலை வீதி, கிரிபத்கொட வீடமைப்புத் திட்டம் மற்றும் கிளை வீதிகள்

## கந்தான / வெலிசர

1 **ஒக். 03 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
ஆனியகந்த வீதி, புஞ்சியவெல்ல, மகுல்பொக்குண, ஏசியன் பினான்ஸ் வீடமைப்புத் திட்டம், ஆனியாகந்தவத்த, குருலு உயன, சென் அந்தனீஸ் மாவத்தை, சொய்சா வத்த, லின்டன் பார்க் மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 04 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
குணசேகர மாவத்தை, லோடன்கேவத்த, தப்போவனாராம மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 06 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
நீர்கொழும்பு வீதியில் வெலிசர சமகி மாவத்தையிலிருந்து அடிவிஸ்ஸ வீதி சந்தி வரை, அடிவிஸ்ஸ வீதி (பகுதி), தொட்டுபொல வீதி, சமகி மாவத்தை, எலாஹிவத்த வீதி, சென் அந்தனீஸ் வீதி (வெலிசர), அமுனுபிட்டிய மாவத்தை, ஜேகப் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 28 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**
ராகம வீதி (பகுதி), பார்ம் வீதி மற்றும் கிளை வீதிகள்

## சீதுவ

1 **ஒக். 05 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
நீர்கொழும்பு வீதியில் புளூ டயமன்ட் வீதி சந்தியிலிருந்து 18ஆம் மைல் கல் வரை, டெம்பள் வீதி, லியனகேமுல்ல, கடோல்கெலேவத்த, மயான வீதி, அரலிய மாவத்தை, தர்ஷன மாவத்தை, கடோல்கெலே வீதி, லயன் சிட்டி, சேர்ச் வீதி, லியனகேமுல்ல, தவட்டகஹவத்த, கிராமோதய மாவத்தை, புளூ டயமன்ட் வீதி, குளோபல் சிட்டி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 19 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பேஸ்லைன் வீதி (பகுதி), எத்வட்ட வீதி, வெலிங்டன்வத்த வீதி, சியம்பலகஹ வீதி, வெட்டவ வீதி, பீட்டர் வீதி, அலுத்ஹேன வீதி, குருந்துவத்த வீதி, ஜயசிரி மாவத்தை, சரண மாவத்தை, வளவ்வத்த வீதி, சேனாநாயக்க வீதி மற்றும் கிளை வீதிகள்

## நீர்கொழும்பு

1 **ஒக். 07 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
வேபொட வீதி, மினுவாங்கொட வீதி, கொன்வன்ட் வீதி, கடற்படை முகாம் வீதி, அவே மரியா மாவத்தை, குணரத்ன மாவத்தை, பீட்டர் பீரிஸ் மாவத்தை, ராஜசிங்க மாவத்தை, கொழும்பு வீதி (பகுதி), சென் ஆன்ஸ் வீதி, விஜய வீதி, மங்கள வீதி, ராஜசிங்க வீதி, பராக்கிரம வீதி மற்றும் ஒழுங்கை, சீ. எம். பர்னாந்து மாவத்தை, பீரிஸ் மாவத்தை, குரண 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் ஒழுங்கைகள், குணரத்ன மாவத்தை, ஜூட் மாவத்தை, கெப்பெட்டிபொல மாவத்தை, ரணவிரு மாவத்தை, காமினி வீதி, ரத்ன வீதி, ரஜ மாவத்தை, வீ.சீ. டி சில்வா மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 11 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
தெல்துவ வீதி, போலவலான மாவத்தை, கொழும்பு வீதி (பகுதி), போப் போல் மாவத்தை, குயீன் எலிசபெத் மாவத்தை, மல்வத்த வீதி (பகுதி), சென் ஜோசப் வீதி (பகுதி), மினுவங்கொட வீதி, கொழும்பு வீதி (பகுதி), சந்தசரண மாவத்தை, கொன்வன்ட் வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 13 பி.ப. 3.00 முதல் பி.ப. 5.00 வரை**
கொழும்பு வீதி (பகுதி), ஜூட் பிளேஸ் (கடோல்கெலே) தலதுவ வீதி (பகுதி), கிறிஸ்டோபர் வீதி, சென் போல்ஸ் வீதி, நாரா வீதி, மிராஜ் வீடமைப்புத் திட்டம், நிக்கலஸ் மார்கஸ் மாவத்தை, அலுத்வத்த, 4ஆம் மற்றும் 5ஆம் ஒழுங்கைகள், கிறிஸ்ட் த கிங் வீதி, ஜோசப் வாஸ் மாவத்தை (பகுதி), பியோ மாவத்தை, கிறீன்ஸ் வீதி (பகுதி), புதிய பஸ் நிலையம் மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 13**
நாரா வீதி, மிராஜ் வீடமைப்புத் திட்டம், நிக்கலஸ் மார்கஸ் மாவத்தை, 5ஆம் ஒழுங்கை மற்றும் கிளை வீதிகள்

5 **ஒக். 14 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
கிம்புளாபிட்டிய வீதி, டெம்பிள் வீதி (பகுதி), கொன்வென்ட் வீதி (பகுதி), கொழும்பு வீதி (தெல்வத்த சந்திக்கு அருகாமையில் உள்ள பகுதி), சென் ஜோசப் வீதி (பகுதி), மல்வத்த வீதி (பகுதி), குவென்டியன் மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

6 **ஒக். 21 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**
பிரதான வீதி, கொப்பரா சந்தி மற்றும் புகையிரதக் கடவை, தெஹிமல்வத்த வீதி (பகுதி), குட்ஷெட் வீதி மற்றும் கிளை வீதிகள்

**பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கு இலங்கை மின்சார சபை மற்றும் LECO நிறுவனம் திட்டமிட்டுள்ளதனால் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

## ஹிக்கடுவ

1 **ஒக். 20**
வேவல மில்ல வீதி, காலி வீதி (பகுதி), சுதுவெல்ல வீதி, சோதர மாவத்தை, நலகஸ்தெனிய, பத்தேகம வீதி (பகுதி), பன்னன்கொட வீதி, வவுலாகொட வீதி, கொடவத்த மற்றும் கிளை வீதிகள்

## பயாகல

1 **ஒக். 16**
மலேகொட வீதி (பகுதி), ஆங்கன்கொட, 16 ஏக்கர் வீதி, பம்பே வீதி, கொரகதெனிய, அம்பகோட்டே வீதி, முலட்டியன, மெட்டியலமுல்ல, பினிடித்தமுல்ல, வெனிவெல்கெட்டிய வீதி, பலயன்கொட, கச்சகொட, நாகஹதுவ வீதி, தெல்கஹலந்த, கலஸ்ஸ வீதி, விஜித மாவத்தை (பகுதி), கோசல மாவத்தை, கொரக்கதெனிய, பம்பே, ஆசிரி மாவத்தை, குணதிலக்கவத்தை, இஹல வெனிவெல்கெட்டிய, STF வீதி, 5ம், 6ம், 7ம், 8ம் மற்றும் 9ம் ஒழுங்கைகள், அம்பகோட்டே வீதி, மெஹிமுல்ல, பஹல வெனிவெல்கெட்டிய வீதி, கொவிசெத வீதி, அரலிய மாவத்தை, மரதகஹவெல வீதி, வெந்தேசிவத்த, நயனா தோட்டம் மற்றும் கிளை வீதிகள்

## மொரட்டுவ

1 **ஒக். 04**
பொல்கொட்டுவ வீதி, கோமஸ் பிளேஸ், ஆனந்தாராம வீதி, போதிருக்காராம வீதி, ராவத்தாவத்த வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 04**
சொய்சா வீதி, சொய்சா வீதி, முத்துகுமாரன மாவத்தை, கல்பொத்த வீதி, டெம்பள் வீதி, சிரமதான மாவத்தை, ராவத்தாவத்த வீதி, ராவத்தாவத்த 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் ஒழுங்கைகள்., அன்திரிஸ் சில்வா மாவத்தை (பகுதி), ஜனத்திஜய மாவத்தை, சென் அந்தனீஸ் மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

3 **ஒக். 16**
வீரபுரன்அப்பு ரஜ மாவத்தை, சாகர 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் ஒழுங்கைகள், ஹோலி குரொஸ் அவன்யூ மற்றும் கிளை வீதிகள்

4 **ஒக். 22**
காலி வீதி (பகுதி), சார்ள்ஸ் பிளேஸ், இடம, 1ம், 6ம் மற்றும் 8ம் ஒழுங்கைகள், சேர்ச் வீதி, கெனொன் ஜேகப் மாவத்தை (பகுதி), லேடி எல்வின் சொய்சா வீதி மற்றும் கிளை வீதிகள்

## பாணந்துறை

1 **ஒக். 13**
காலி வீதியில் பாணந்துறை பஸ் நிலையம் முதல் வலான சந்தி வரை, ஹொரண வீதி (பகுதி), பிரதான தெரு (பகுதி), கிறேஸ் பீரிஸ் மாவத்தை, தேசசேவா மாவத்தை, சுகத்தாமக, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, நிமல மாவத்தை, நொயெல் மெண்டிஸ் மாவத்தை, ஸ்ரீ மேத்தாநந்த மாவத்தை (பகுதி), உயன்கெலே வீதி, உயன்கெலே குறுக்கு வீதி, த சொய்சா வீதி (பகுதி), ஜனப்பிரிய மாவத்தை (பகுதி), ஜயதிலக்க மாவத்தை (பகுதி), சுசந்த மாவத்தை, மார்கட் வீதி, கோவிலவத்த வீதி, மகாநாம வீதி, கங்கா மாவத்தை, சமந்த மாவத்தை, வீரசிங்க ஒழுங்கை, சிறில் ஜேன்ஸ் மாவத்தை (பகுதி), ஆர்தர் வீ டயஸ் மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக். 13**
ஹொரண வீதி (பகுதி), ஸ்ரீ மகா விகார வீதி, பொன்சேக்கா பிளேஸ், 7ம் குறுக்குத் தெரு, ஜனப்பிரிய மாவத்தை, பொன்சேக்கா வீதி, டயஸ் இடம், ஆரியரத்னாராம வீதி, வலபொல வீதி, 7ம் குறுக்கு வீதி, பெர்னாண்டோ வீதி, சொலமன் மாவத்தை, பண்டாரநாயக்க மாவத்தை, ஜனஉதானகம்மானய, அரசாங்க வீடுகள், ஜோதிரத்ன மாவத்தை, சந்திரசேகர மாவத்தை, ஜயஜன மாவத்தை, உபசேன மாவத்தை, எட்டபாகொட, மிஹிந்து மாவத்தை, சாந்தி மாவத்தை, சின்சபா மாவத்தை, குருப்புமுல்ல வீதி, பொக்குண வீதி, பஹன்கம, ஹாமுகேவத்த, கோன்கஹவத்த, டட்லி சேனாநாயக்க மாவத்தை, ஸ்ரீயா மாவத்தை, பராக்கிரம மாவத்தை, பெரேரா வீதி, மினுவன்பிட்டிய வீதி (பகுதி), தந்திரிமுல்ல வீதி, சிறில் ஜேன்ஸ் மாவத்தை, அட்டபாகொட வீதி, மலமுல்ல வீதி, ஜயதிலக்க மாவத்தை (பகுதி), வீரமன் வீதி, டி சில்வா வீதி, குணதிலக்க வீதி, வலான பழைய வீதி (பகுதி), தம்மானந்த வீதி (பகுதி), குலதுங்க வீதி, வத்தல்பொல வீதி, பெரேரா மாவத்தை, தம்மானந்த மாவத்தை, திஸ்ஸ மாவத்தை, கெமுனு மாவத்தை, ஜுபிலி ஒழுங்கை, பெக்கேகம வீதி, அம்பலந்துவ, கல்துபே, போகஹ வீதி, நவெட்டிய வீதி, பீரிஸ் மாவத்தை, வெந்தேசிவத்த, தூவ வீதி மற்றும் கிளை வீதிகள்

## கெசெல்வத்த

1 **ஒக். 13**
பழைய காலி வீதி (பகுதி), ஸ்ரீ விமலாராம வீதி, ஞானசேன மாவத்தை, குமாரதுங்க முனிதாச மாவத்தை, ஹென்றிக் பீரிஸ் மாவத்தை, விஜய வீதி, பொதுசேவா மாவத்தை, வத்தல்பொல வீதி, சங்கானந்தா வீதி, தொட்டவத்த வீதி, ராசிக் வீதி, இப்றாஹிம் வீதி, யோனக மாவத்தை, கிம்பொத்த வீதி, வத்தல்பொல வெத மாவத்தை, வத்தல்பொல விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள வீதி, மீரியவத்த வீதி, தொட்டுபொல வீதி, மிஹிந்து மாவத்தை, விஜய மாவத்தை, கலீபா வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஒக் 13**
காலி வீதியில் பள்ளிமுல்ல சந்தியிலிருந்து வலான சந்தி வரை, வலான ஸ்ரீநிவச மாவத்தை, குணசேன மாவத்தை, ஸ்ரீநிவச மாவத்தை, குணசேன மாவத்தை, குமாரதுங்க மாவத்தை, ஜுபிலி வீதி, தம்மானந்த மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

## நுகேகொட

1 **ஒக். 11**
திலக்கரத்ன மாவத்தை (பகுதி), ஜுபிளி போஸ்ட், எக்வத்த வீதி, ஜயமங்கள வீதி, நாகவிகார வீதி, ரஜ மாவத்தை (பகுதி), தேவால வீதி, கோட்டே வீதியில் ஜுபிளி போஸ்ட்டிலிருந்து சூட் ஹவுஸ் வரை, பழைய கொட்டாவ வீதி, ரஜமஹாவிகார வீதி, பாகொட வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

| 03 | வெனிவெல்ஆர வாரச்சந்தை மற்றும் அதன் கழிவறை | 100,000.00 | 10,000.00 | 1,505,500.00 |
| 04 | சூரியவெவ மீன் பொதுச்சந்தை | 50,000.00 | 10,000.00 | 840,000.00 |
| 05 | சூரியவெவ வாரச்சந்தையின் பொதுக் கழிவறை | 3,000.00 | 1,000.00 | 150,000.00 |
| 06 | சூரியவெவ வாரச்சந்தையின் வாகனத்தரிப்பிடம் | 10,000.00 | 1,000.00 | 48,600.00 |
| 07 | சூரியவெவ பஸ் நிலையத்திற் கன்மையிலுள்ள பொது அறிவித்தல் பலகை (20'x10') | 1,000.00 | 1,000.00 | 22,625.00 |
| 08 | ஹட்பஹ சந்திக்கண்மையிலுள்ள பொது அறிவித்தல் பலகை (20'x115') | 1,000.00 | 1,000.00 | 30,000.00 |

மேலதிக விபரங்களை அலுவலக தொலைபேசி இலக்கம் 047-2288212 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:**
மேற்படி கேள்வித் தொகைக்கு மேலதிகமாக பெசேவ (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியையும் அரசு அவ்வப்போது விதிக்கும் ஏனைய வரிகளையும் செலுத்துதல் வேண்டும்.

**ஜே. எரந்த ஜனக**
**தலைவர்,**
**சூரியவெவ பிரதேச சபை**

**2022.09.22ஆம் திகதி**
**சூரியவெவ பிரதேச சபை அலுவலகத்தில்**

# கேள்விக்கான அழைப்பு

## (இலங்கை அரச மானியத் திட்டம்)

## விவசாயத் திணைக்களம் – பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தின், திட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

2022.09.29 முதல் 2022.10.11 பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் இத்திணைக்களத்தின் திட்ட மற்றும் பயிற்சி நிலையத்திலிருந்து கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ளலாம். 2022.10.12 மு.ப. 11.30 இற்கு முன்னர் இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி அட்டவணையில் குறிப்பிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது பதித் தபாலில் அனுப்புவதன் மூலம் கேள்விகளை ஒப்படைக்கலாம் அன்றே மு.ப. 11.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி, நேரத்தை குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

| கேள்வி இலக்கம் | கொள்வனவு செய்யப்படும் பொருட்கள்/ சேவைகள் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ. சதம்) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | காசாக செலுத்துவ தாயின் (ரூ. சதம்) | வங்கிப் பிணையாக சமர்ப்பிப்பதாயின் (ரூ. சதம்) |
| தி/ப/06/02/2022-104 | வாரியப்பொல விவசாயக் கல்லூரியின் குழாய் கிணற்றுக்காக மின்சாரத்தில் இயங்கும் நீர் பம்பியொன்றை வழங்கிப் பொருத்துதல் | 1,500.00 | 15,000.00 | 30,000.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**திட்டம் மற்றும் பயிற்சி நிலையம்**
**விவசாயத் திணைக்களம்**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**
**தொ.பே. இலக்கம்: 081-2389127**
**பெக்ஸ்: 081-2387403**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ML/61/2022 | புதிதாக கார்பெட் இடப்பட்ட கொழும்பு வீதிகளில் மேன்ஹோல் மூடிகள் மற்றும் கலி மூடிகளை உயர்த்துதல் | 5,750.00 | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சகிதம் இது போன்ற வேலைகளில் குறிப்பிடத்தக்க அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் | பணிப்பாளர் (வேலைகள்) தொலைபேசி: 0112-685055 |

**விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04,
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு-06.
- வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
  மாளிகாகந்த, கொழும்பு-10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2022-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022-10-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.05.18ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.04.18ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-10-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022-10-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

**விலைமனுக் கோரல் - திறந்த விலைமனுக் கோரல்), LCC/22-23/ST/29/1**

## இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட் லிமிடட்)

**லக்விஜய மின்வலு ஆலைக்கு (நிர்ணய விலையிலான திறந்த விலைமனுக் கோரல்)**
**நிரக்கரி வழங்குனர்களை பதிவு செய்தல்**

இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் (LCC) சார்பாக மின்வலு அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட கொள்முதல் குழுத் (SSCAPC) தலைவரினால் லக்விஜய மின்வலு ஆலைக்கு மெட்ரிக்தொண் (900 MW) நிரக்கரி வழங்குவதற்காக இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் உடன் பதிவு செய்ய விரும்பும் நிலக்கரி வழங்குனர்களிடமிருந்து நிலக்கரி வழங்கு பதிவு செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. (உள்ளூர் அல்லது சர்வதேச) மனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுபவர்கள் SSCAPC சார்பாக லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் (இனி "LCC" என குறிப்பிடப்படுகிறது) மூலம் மனுக்கள் கோரப்படுகின்றது.

1. கொள்முதல் முறை சர்வதேச முறைக்கமைய செயற்படுத்தப்படும். (ICB)
2. ஒப்பந்த காலம் அக்டோபர் 2022 முதல் டிசம்பர் 2022 வரை
3. லக்விஜய மின்வலு ஆலைக்கு வழங்கப்படும் நிலக்கரியின் மதிப்பிடப்பட்ட அளவு 300,000±10% MT ஆகும்.
4. நிலையான CFR விலை குறைந்தபட்சம் 180 நாட்கள் கிரெடிட் காலத்துடன் USD அல்லது LKR இல் குறிப்பிடப்பட வேண்டும்.
5. மனுக் பாதுகாப்புத் கட்டணம் 900,000 USD அல்லது ரூ.330 மில்லியன் மற்றும் விலைமனுக்கோரல் நிறைவடைந்து மூன்று மாதங்கள் வரை செல்லுபடியாகும்.
6. விலைமனுக்களை **2020 அக்டோபர் 20** ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை (இலங்கை நேரப்படி) சமர்ப்பிக்கலாம். ஆகும்.
7. மனுதாரர்களுக்கான அடிப்படை தகுதி அளவுகோல்கள், நிறுவனப் பதிவானது 3 ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும், கடந்த 3 ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் 1 மில்லியன் மெட்ரிக் டன் நிலக்கரியினை மொத்த கலோரி.ஃபிக் மதிப்பான 5900 கிலோகலோரிக்கு மேல் வழங்கப்பட வேண்டும், கடந்த 3 நிதியாண்டுகளில் வருடாந்த சராசரி விற்றுமுதல் USD 50 மில்லியனாக மற்றும் ஏனைய நிபந்தனைகள் மனு ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.
8. மனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை USD 700.00 அல்லது ரூ. 250,000.00 மீள்ளளிக்கப்படதா கட்டணம் செலுத்திய **வைப்பு செய்யப்பட்ட ரசீது** அல்லது **டெலிகிரா.ஃபிக் டிரான்ஸ்.ஃபர் (TT) ரசீதுடன்** எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் **2022 அக்டோபர் 03 முதல் 2022 அக்டோபர் 15** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப.09.00 முதல் பி.ப.4.00** வரை (இலங்கை நேரப்படி) **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், இல-51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி (முன்னால்), கொஹுவல, தெஹிவல, இலங்கை 10350. எனும் முகவரியில்** பெற்றுக்கொள்ளலாம்.
   **வங்கி கணக்கு விபரங்கள்,**

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,** |
| கணக்கு இலக்கம் | : | **004100130000745** |
| வங்கி | : | **இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை பிரிவு<br>இல-35, விஜேவர்தன மாவத்தை,<br>கொழும்பு 10, இலங்கை.** |
| SWIFT குறியீடு | : | **PSBKLKLX** |

9. LCC பதிவு செய்யப்பட்ட நிலக்கரி வழங்குனர்கள் மனு ஆவணத்தை தனித்தனியாக பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை, அவை அவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும்.

8. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் நிலக்கரி வழங்குனர்களை பதிவு செய்வதற்கான எழுதுதுப்பூர்வ கோரிக்கையை வேலை நாட்களில் **மு.ப.09.00** மணி முதல் **பி.ப.3.30** வரையான காலப்பகுதியினுள் கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்தில் சமர்ப்பிபதன் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

   **முகாமையாளர் - கொள்முதல்**
   **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,**
   **இல-51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி, கொஹுவல,**
   **தெஹிவல, இலங்கை**

10. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **2022 அக்டோபர் 20** (இலங்கை நேரப்படி) **மு.ப.10.00** மணிக்கு முன் கீழே உள்ள முகவரிக்கு வழங்கப்பட வேண்டும், அதன் பின்னர் உடனடியாக திறக்கப்படும்.

    **தலைவர் - நிர்வாக இயக்குனர்,**
    **(SSCAPC) தலைவரினால்**
    **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,**
    **இல-51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி, கொஹுவல,**
    **தெஹிவல, இலங்கை.**

11. முன்மனுக் கூட்டம் **2022.10.10** ஆம் திகதி **14.00** மணிக்கு நடைபெறும். **2022.10.10** திகதிக்குள் அனைத்து பதிவு செய்யப்பட்ட நிலக்கரி வழங்குனர்களுக்கும் மனு ஆவணத்தை பெற்றுக்கொண்டவர்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்படும்.
12. மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் (இரண்டு நபர்கள் மட்டுமே) மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
13. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் உள்ள ஏற்பாடுகள் இந்தக் கொள்வனவுக்குப் பொருந்தும்.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தயவு செய்து தொலைபேசி இலக்கம் : 011-2824681/ 2 அல்லது +94 777845219 தொலைநகல் : 011-2824689, மின்னஞ்சல் முகவரி : **sujantha.pm@lankacoal.lk**. யின் ஊடாக முகாமையாளர் - (கொள்முதல்) இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் தொடர்பு கொள்ளவும்.

**இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**
**51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி, கொஹுவல - தெஹிவல, இலங்கை 10350.**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் சார்பில் (**EOM&M)** திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | பொறியியலாளரின் மதிப்பீடு (சில்லறைச் செலவுகள் இன்றி) / (ரூபா) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்காட்டி நாட்களில்) | CIDA தரம் | விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|---|
| **RDA/EOM&M/GOSL/Row-Rep/CKE/ 2022/21** | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பேலியகொட முதல் ஜா-எல வரையில் வலது பக்க வேலிகளை புனரமைத்தல் | 70.0 | 182 | C4 & C3 | 1,000,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகார சபையில் (ICTAD) பெருந்தெருக்கள் நிர்மாணத்திற்காக C4 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை எந்தவொரு ஒழுங்கிலும் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை, தேவைப்படின், பணிப்பாளர் (EOM&M), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். [தொலைபேசி: 011-3047806. தொலைநகல்: 038-2289560]

5. சீதுவ, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு, பணிப்பாளரின் அலுவலகத்தில் 2022.10.12ஆம் திகதியன்று பி.ப. 1.45 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். அதன் பின் தேவையாயின் உடனடியாக தள விஜயத்திற்கான ஏற்பாடும் செய்து கொடுக்கப்படும். இந்த முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமை விலைக்கோரலுக்கான தகுதியீனமாகும் / ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு தகுதியீனமாகும்.

6. 2022.09.29ஆம் திகதியிலிருந்து 2022.10.12ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000.00 ரூபா + **2,250.00 (**பெசேவ) ரூபாவைச் செலுத்திய பின்னர், கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், முகவர் மற்றும் இக்கேள்வியின் சித்திகரமான வெற்றியாளர்கள் கம்பனிகளின் பதிவாளரின் திணைக்களத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைக்கோரல் தரவில் தரப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023-02-17ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.10.21ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு, மே/பா பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ஆம் தளம், ''மகநெகும மஹமெதுர'' இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைக்கோரலில் கலந்து கொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. விலைமனுக்கள் 2023-01-20ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**1ஆம் தளம், ''மகநெகும மஹமெதுர''**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6387(MP) | 02 Nos. Accumulators for the TCM FD 250-3 Forklift | 30,000.00 | 1,000.00 | 01-11-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/21/PT/01/054 | Cloth Polyester Brown Suiting – 7700 Meters | 50,000.00 | 1,000.00 | 19-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/052 | 2100 Ltr. SAE 15W-40 Multi Grade Engine Oil | 19,000.00 | 1,000.00 | 19-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/055 | 50 Nos. Sealed Type Battery 12V 90AMPH (SEMI-MAINT.FREE) | 15,000.00 | 1,000.00 | 19-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/10/012-A | 16 Nos. of Tabs Rugged | 40,000.00 | 1,000.00 | 20-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/10/054 | Over Board Valves for the Launches Pilot 14 & 15 | 30,000.00 | 1,000.00 | 20-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/10/055 | 15 Nos. of Motor Tyres 1800X25 40PLY | 120,000.00 | 3,500.00 | 20-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/14/007 | Supply, Installation & Commissioning of Computed Radiograph (CR) + Dental CR System for Upgrading the Existing X-Ray Machine | 25,000.00 | 1,000.00 | 21-10-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/14/019 | Supply of ZED GI Purlin | 100,000.00 | 3,500.00 | 21-10-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**தெற்கு அதிவேக வீதியின் பரவாகும்புக்க முதல் மத்தளை ஹம்பாந்தோட்டை வரையான பகுதியில் பராமரிப்பு விடயங்கள் சார்பாக தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

01. அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் (நெ.செ.பரா மற்றும் செ. பிரிவு) பெறுகைக் குழுவின் தலைவரால், வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக அதிவேக நெடுஞ்சாலை பிரிவின் கீழ்க்காணும் செயற்றிட்டங்களுக்காக தகைமையும் தகுதியுமுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதம்) | முழுத் தொழிலாளர் நாட்கள் எண்ணிக்கை | கேள்வி பிணை (ரூ) |
|---|---|---|---|---|---|
| RDA/EOM&M/GOSL/MNT/ESEP/SP/2022/37 | தெற்கு அதிவேக வீதியின் பரவாகும்புக்க முதல் மத்தள ஹம்பாந்தோட்ட வரையான பகுதியின் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதற்கான தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் | 45 | 12 | 13500 | 300,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் 2023.01.20 வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2023.02.17ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்
08. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.10.14ஆம் திகதி 10.30 மணிக்கு கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகமவில் பணிப்பாளர் அலுவலகத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்திக்கு உரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெறும்.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு விலைக்கோரல் ஆவணத்திற்கு ரூ. 7000.00 + 1050.00 (VAT) கட்டணத்தை ரொக்கப் பணமாக செலுத்தி கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரித்தான நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2022.09.29ஆம் திகதி முதல் 2022.10.20ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையும் சிங்கள மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர்/ பிரதிநிதி மற்றும் வெற்றிகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் இயைபுடைய கேள்விக்கு பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும். 2022.10.21ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.10.21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குறித்த செயற்றிட்டத்தின் பெயரை குறிப்பிடப்படல் வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ம் மாடி, மகநெகும மஹமெதுர, இல. 216 டென்சில் கொப்பேகடுவ மாவத்த கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் இடத்திலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
    - ➢ பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு)
      வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011 3047806

**தலைவர்**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை பெறுகைக் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**1ம் மாடி, மகநெகுமு மஹமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

மெதத்தும்பர பிரதேச சபை

# 2023 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

2023ஆம் ஆண்டு சார்பாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் 2022.12.31 அல்லது அதற்கு முன்னர் தலைவர், மெதத்தும்பர பிரதேசசபை, தெல்தெனிய என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன் விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவுசெய்தல் - 2023 ஆம் ஆண்டு என்று குறிப்பிடுதல் வேண்டும். அந்தந்த வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை செயலாளர், மெதத்தும்பர பிரதேச சபை என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலையின் மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

03. தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் (சகல விபரங்களுடன்) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | வழங்கல்கள்/சேவைகள் | பதிவுக்கட்டணம் | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| 01 | சகல அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் | 1500 | 00 |
| 02 | உருக்கு அலுமாரி, கதிரை, கெபினட் உட்பட உருக்கு உற்பத்திகள் | 1500 | 00 |
| 03 | அச்சு விடயங்கள், அச்சுப்படிவங்கள் மற்றும் ரெஜிஸ்டர் | 1500 | 00 |
| 04 | ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் துணைபாகங்கள் | 1500 | 00 |
| 05 | கணினி உட்பட சகல அலுவலக இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள் பழுதுபார்த்தல் | 1500 | 00 |
| 06 | கணினி ஆலோசனை சேவை | 1500 | 00 |
| 07 | மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 1500 | 00 |
| 08 | தும்புத்தடி, விளக்குமாறு, பிரஷ், மொப், கால்துடைப்பான், பிரம்பு கூடை, குழாய், குப்பை வண்டி, வீல்பெரக், மலசலகூட பிரஷ், கிருமிநாசினி, வாளி போன்ற சுகாதார உபகரணங்கள் | 1500 | 00 |
| 09 | பிவிசி பைப் குழாய் மற்றும் துணைப்பாகங்கள் | 1500 | 00 |
| 10 | வீதி ஒளியூட்டலுக்கு தேவையான சகல உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 1500 | 00 |
| 11 | கல்வணைஸ் பைப், உதிரிப்பாகங்கள், இரும்பு, கல்வணைஸ் ஷீட், கம்பி, வளைவு இரும்பு மற்றும் உலோகப்பொருட்கள், ஆணி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி மற்றும் தொழிலாளர் ஆயுதங்கள் | 1500 | 00 |
| 12 | சீருடைக்கு தேவையான துணி, பொத்தான், தோள் அணிகள், கெப், மழை அங்கி, பாதணி, கம்பூட்ஸ், கையுறை | 1500 | 00 |
| 13 | தீந்தை வகைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்கள் | 1500 | 00 |
| 14 | கிருமிநாசினி (குளோரின், JC பவுடர்) | 1500 | 00 |
| 15 | பெயர் பலகை, அறிவித்தல் பலகை, பதாதை போன்றன | 1500 | 00 |
| 16 | வாகன பழுதுபார்த்தல் மற்றும் தயாரித்தல் | 1500 | 00 |
| 17 | வீதி அழுத்தி, டிரக்டர் மற்றும் டெயிலர், பெக்கோ இயந்திரம், வீதிப்பராமரிப்பு இயந்திரம், கலி பவுசர் வாடகைக்கு வழங்கல் | 1500 | 00 |
| 18 | கருங்கல் சிப்ஸ், ஆற்று மணல், செங்கல், சரளைக்கல், இரும்பு, சுண்ணாம்பு, விறகு, பிளந்த விறகு, தார், கோலாஸ், கல், சீமெந்து உட்பட சகல வகையான கட்டிடப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 1500 | 00 |
| 19 | ஹியூம்பைப், கொங்றீட் தூண், சீமெந்து கல் உட்பட கொங்றீட் உற்பத்திகள் | 1500 | 00 |
| 20 | டயர் டியூப் மற்றும் பெற்றரி | 1500 | 00 |
| 21 | வெற்றுபெரல், பழைய பேப்பர், கழிக்கப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்தல் | 1500 | 00 |
| 22 | காணி அளத்தல் மற்றும் மதிப்பீட்டு சேவை வழங்குதல் | 1500 | 00 |

**பொது நிபந்தனைகள்**

01. தேவைப்படும் வேளையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அப்பால் வேறு வழங்குநர்கள் அல்லது வழங்கல் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் சபைக்குரியது.
02. பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை சமர்ப்பித்தல் அல்லது சரியான நேரத்தில் ஓடர்களை வழங்குவதற்கு தவறுகின்ற விலைக்கோரல் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படாத வழங்குநர்கள் வழங்கல் நடவடிக்கையிலிருந்து நீக்கப்படுவார்.
03. சபைக்கு வழங்குவதற்கு முற்பணம் கோரும் வழங்குநர்களின் பெயர்பதிவு செய்யப்பட மாட்டாது.
04. குறைந்தபட்சம் 60 நாள் கால எல்லைக்கு கடன் வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.
05. வெட்வரி, வருமான வரிக்காக பதிவு செய்வதாயின் பதிவு செய்தல் சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்
06. வழங்கல் விடயங்களை மேற்கொள்ளும் போது பிரதேச சபைச் சட்டம், காசு சட்டங்கள், நிதி விதிகளின் பிரகாரம் அரசினால் அவ்வப்போது விநியோகிக்கப்படும் சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் பிரதேச சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணைங்குதல் வேண்டும்.

**தலைவர்,**
**மெதத்தும்பர பிரதேச சபை**



# இலங்கை லெஜன்ட்ஸின் அரையிறுதி ஆட்டம் இன்று

வீதிப் பாதுகாப்பு டி20 உலகத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் இலங்கை லெஜன்ட்ஸ் அணி இன்று (29) மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்ளவுள்ளது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் தோல்வியுறாத அணியாகவே டி.எம் டில்ஷான் தலைமையிலான அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை ரைப்பூரில் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் இலங்கை லெஜன்ட்ஸ் 70 ஓட்ட வித்தியாசத்தில் இலகு வெற்றியீட்டி இருந்தது. முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணிக்கு ஆரம்ப வீரராக வந்த சனத் ஜயசூரிய 25 பந்துகளில் 37 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மஹேல உடவத்த 43 ஓட்டங்களை பெற்றதோடு டில்ஷான் 30 பந்துகளில் 51 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் இலங்கை லெஜன்ட்ஸ் 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 213 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் லெஜன்ட்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களையே பெற்றது. இதன்படி பிரையன் லாரா தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் லெஜன்ட்ஸ் அணியுடனான அரையிறுதிப் போட்டி இன்று மாலை 7.30க்கு ரைபூரில் ஆரம்பமாகவுள்ளது.

# எருக்கலம்பிட்டி மு.ம.வி. முதலிடம்



வடமேல் மாகாண பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் எருக்கலம்பிட்டி மு.ம. வித்தியாலயத்தின் 16 வயதுக்கு உட்பட்ட உதைபந்தாட்ட அணி முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குருணாகல் மலியதேவ மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கட்டுநேரிய புனித செபஸ்டியன் கல்லூரியை எதிர்கொண்ட எருக்கலம்பிட்டி முஸ்லிம் மஹா வித்தியாலய அணி பெனால்டி முறையில் மூன்று கோல்களை போட்டதன் மூலம் மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

இருபது வயதுக்குட்பட்ட எருக்கலம்பிட்டி மு.ம. வித்தியாலய அணி, புத்தளம் சாஹிறா கல்லூரியை எதிர்கொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவுசெய்யப்பட்டது.

# தர்கா நகரை வீழ்த்தியது மருதானை கழகம்





*பேருவளை விசேட நிருபர்*

மொரகல்ல புட்சல் விளையாட்டரங்கில் நடைபெற்ற தர்கா நகர் விளையாட்டு கழகத்திற்கு எதிரான சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியில் பேருவளை மருதானை விளையாட்டுக் கழகம் 3–2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. பேருவளை மர்ஹூமா பி.எம்.எப். கைருன் நிஸா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக எம்.யூ.எம். கமால்தீன் ஹாஜியாரினால் இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் மருதானை விளையாட்டுக் கழகத்தின் தலைவர் முஹம்மத் இக்ராம் மூன்று கோல்களை பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தார். இப்போட்டிக்கு சுப்பர் சன் விளையாட்டுக் கழக முன்னாள் செயலாளர் எம்.என்.எம் றிம்ஸான் நடுவராக கடமையாற்றினார்.

பரிசளிப்பு விழாவில் மொரகல்ல புட்சல் விளையாட்டு மைதான முகாமையாளர் திலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

# டி.எஸ். சேனநாயக்க கல்லூரி ஹொக்கியில் முதலாம் இடம்

*அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்*



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஹொக்கி விளையாட்டுப் போட்டி மற்றும் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகளில் அம்பாறை டி.எஸ். சேனநாயக்க கல்லூரி முதலிடம் பெற்று தேசிய ரீதியான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (26) காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மைதானத்தில் நடைபெற்ற ஹொக்கி இறுதிப்போட்டியில் டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணி மூன்று கோல்களை புகுத்தி முதலாமிடத்தை பெற்றுக் கொண்டது.

இதில் இரண்டாம் இடத்தை காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை காரைதீவு சண்முகா மகாவித்தியாலய அணியும் பெற்றன.

# காத்தான்குடியில் பூப்பந்து உள்ளக அரங்கு திறப்பு

*திராய்க்கேணி தினகரன் நிருபர்*



காத்தான்குடி பிரதேசத்தின் நீண்டகால தேவையாக இருந்த பூப்பந்து உள்ளக அரங்கு அண்மையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி மத்திய கல்லூரியின் அதிபர் எம்.சி.எம்.ஏ சத்தார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவும் விசேட அதிதியாக நகரபிதா எஸ்.எச்.எம் அஸ்பரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பூப்பந்து விளையாட்டு வீரர்கள் இடையே நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் நடைபெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள இந்த பூப்பந்து உள்ளக அரங்கு யெஸ்டோ அமைப்பினால் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகம் வெற்றி

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



அம்பாறை மாவட்ட கிரிக்கெட் சம்மேளனத்தினால் நடத்தப்படும் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் விளையாட்டு கழகங்களுக்கிடையிலான கடினப் பந்து கிரிக்கெட் சுற்று போட்டியில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகம் 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்திற்கும் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான போட்டி காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலெடுத்தாடிய காரைதீவு விவேகானந்தா 39.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

## சர்வதேச செய்திகள்

# சவூதி பிரதமரானார் இளவரசர் முஹமது



சவூதி அரேபியாவில் அமைச்சரவை மாற்றம் ஒன்றுக்கு உத்தரவிட்டிருக்கும் மன்னர் சல்மான், தனது மகனான முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மானை பிரதமராக நியமித்துள்ளார்.

ஏற்கனவே உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாட்டின் சக்தி மிக்கவராக இருக்கும் இளவரசர் முஹமதின் அதிகாரத்தை உத்தியோகபூர்வமாக உறுதி செய்வதாகவே இந்தப் பதவி உள்ளது.

முன்னர் அவர் பிரதிப் பிரதமராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தார். இந்நிலையில் அவரது இளைய சகோதரர் காலித் பின் சல்மான பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் இந்த அரசின் ஆணையில் ஏனைய பதவிகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. முன்னதாக சவூதியின் பிரதமர் பதவியை 86 வயதான மன்னரே வகித்து வந்தார்.

2015ஆம் ஆண்டிலிருந்து மன்னராக வீற்றிருக்கும் சல்மான் இவ்வாண்டு மட்டும் இரண்டு முறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

# இயன் புயல் தாக்கியதால் இருளில் மூழ்கியது கியூபா



கியூபா தீவின் மேற்கு முனையை இயன் புயல் துவம்சம் செய்ததைத் தொடர்ந்து ஒட்டுமொத்த கியூபாவும் இருளில் மூழ்கியுள்ளது.

நாட்டின் பிரதான மின் விநியோக நிலையங்களில் ஒன்று செயற்பாட்டுக்குத் திரும்பாத நிலையில் மின்சாரக் கட்டமைப்பு முழுமையாக செயலிழந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் நாட்டில் 11 மில்லியன் மக்கள் இருளில் தவிக்கின்றனர். இந்த புயல் தாக்கியதில் இருவர் உயிரிழந்ததோடு கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

மூன்றாம் நிலை புயலாக வகைப்படுத்தப்பட்ட இந்த புயலினால் மணிக்கு 195 கி.மீ வேகத்தில் காற்று வீசியதோடு தற்போது அந்தப் புயர் அமெரிக்காவின் புளோரிடாவை நோக்கி நகர்ந்துள்ளது.

# உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைக்க ஆதரவு வாக்கு



உக்ரைனின் ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியங்களில் ரஷ்யா கடந்த ஐந்து நாட்களாக நடத்திய சர்வஜன வாக்கெடுப்பில் அந்தப் பிராந்தியங்கள் ரஷ்யாவின் அங்கமாக இணைய அதிகப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்துள்ளன. எனினும் இந்த வாக்கெடுப்பை சட்டவிரோதமானது என்றும் வெட்ககரமானது என்றும் உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

உக்ரைன் நிலப்பகுதியில் 15 வீதத்தை உள்ளடக்கிய மொனட்ஸ்க், லுஹன்ஸ்க், சபோரிசியா மற்றும் கெர்சோன் ஆகிய நான்கு பகுதிகளில் இந்த சர்வஜன வாக்கெடுப்பு அவசர அவசரமாக நடத்தப்பட்டது.

தமது மக்களில் 98.4 வீதமானவர்கள் ரஷ்யாவுடன் இணைய விருப்பத்தை வெளியிட்டிருப்பதாக லுஹன்ஸ்க் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. ரஷ்யாவுடன் இணை ஆதரவாக 87 வீதத்துக்கு அதிகமான வாக்குகள் பதிவாகி இருப்பதாக கெர்சோன் தேர்தல் குழு தலைமை குறிப்பிட்டுள்ளது.

சுயமாக அறிவித்துக்கொண்ட மொனட்ஸ்க் மக்கள் குடியரசின் 99.2 வீதமானவர்கள் ரஷ்யாவுடன் இணை ஆதரவு அளித்திருப்பதாக அந்தப் பிராந்திய தலைவர் டெனிஸ் புஷிலின் அறிவித்துள்ளார். இந்த நான்கு பிராந்தியங்களிலும் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்டு விட்டதாக அறிக்கப்பட்டுள்ளது.

இங்கு வாக்குப் பெட்டிகள் வீடு வீடாக எடுத்துச் செல்லப்பட்டு வாக்களிப்பு இடம்பெற்றிருக்கும் நிலையில் இதனை சட்டவிரோதமானது என்று உக்ரைன் மற்றும் அதன் கூட்டணி நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ரஷ்ய பாராளுமன்றத்தின் கூட்டு அமர்வில் உரை ஒன்றை நிகழ்த்தி இந்த நான்கு பிராந்தியங்களையும் ரஷ்யாவுடன் இணைக்கும் அறிவிப்பை அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக கடந்த 2014இலும் உக்ரைனிடம் இருந்து கைப்பற்றிய கிரிமியா பிராந்தியத்திலும் இதுபோன்ற சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்ட பின் அதனை ரஷ்யாவுடன் இணைக்கும் அறிவிப்பை புட்டின் வெளியிட்டிருந்தார்.

ரஷ்யா ஐ.நா சாசனத்தை கொடூரமான முறையில் மீறுவதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமரி செலென்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

# டொலரின் மதிப்பு உச்சம்



அமெரிக்க டொலரின் பெறுமதி 20 ஆண்டுகள் காணாத அளவுக்கு உச்சத்தைத் தொட்டுள்ளது.

உலகளவில் அதிகரிக்கும் வட்டி வீதம் பொருளாதார மந்தநிலை குறித்த அச்சத்தை எழுப்பியுள்ள நிலையில் இத்தகவல் வெளிவந்துள்ளது.

பிரிட்டிஷ் பவுண்டின் மதிப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி அமெரிக்க டொலர் வலுவடைவதற்குப் பங்களித்துள்ளதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஆசிய வர்த்தகத்தில் அமெரிக்க டொலர் குறியீடு 0.5 வீதம் அதிகரித்து சுமார் 114.70 என்ற புதிய உச்சத்தை எட்டியது. வலுவான அமெரிக்க டொலருக்கு நிகராக அவுஸ்திரேலிய டொலர், யூரோ ஆகியவற்றின் மதிப்பும் சரிந்தது. வெளிநாட்டு அளவில் பயன்படுத்தப்படும் சீனாவின் யுவான் நாணயத்தின் மதிப்பும் 11 ஆண்டுகள் இல்லாத அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. அமெரிக்க மத்திய வங்கி இந்த மாத ஆரம்பத்தில் வட்டி வீதத்தை மீண்டும் அதிகரித்த நிலையிலேயே டொலரின் மதிப்பு உயிர்ந்துள்ளது.

பிரச்சினைக்குரிய நேரத்தில் தமது பணத்தை வைத்திருக்க டொலர் பாதுகாப்பானது என்று பல முதலீட்டாளர்களும் நம்புகின்றனர். இது ஏனைய நாணயங்களுக்கு எதிரான டொலரின் மதிப்பு அதிகரிக்க உதவியுள்ளது.

# பால்டிக் எரிபொருள் கசிவின் பின்னணி தொடர்பில் ஐயம்



பால்டிக் கடலில் ஏற்பட்டுள்ள எரிபொருள் கசிவு ரஷ்யாவின் நொர்ட் ஸ்ட்ரீம் குழாய்களில் செய்யப்பட்ட சதித்திட்டமாக இருக்கலாம் என்ற ஐயங்கள் எழுந்துள்ளன.

ரஷ்யாவின் கீழ் இயங்கும் நொர்ட் ஸ்ட்ரீம் குழாய்கள், ஐரோப்பாவுக்கு எரிபொருளை விநியோகம் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அந்தக் குழாய்களின் 3 இடங்களில் கசிவு ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டது.

அதை ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்று ரஷ்யா வர்ணித்தது. ஆனால் அது சதி வேலையாக இருக்கும் என்று ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வோன் டெர் லெயென் கூறினார்.

ஐரோப்பாவின் எரிசக்திக் கட்டமைப்பு குறிவைக்கப்பட்டால் மோசமான பதிலடியைச் சந்திக்க நேரிடும் என்று அவர் எச்சரித்தார்.

சுவீடன், வோன் டெர் லெயெனின் கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட கசிவுகள் திட்டமிட்ட செயல் என்று சுவீடன் கூறியுள்ளது.

அமெரிக்காவின் மத்திய உளவுத்துறை அமைப்பு, நொர்ட் ஸ்ட்ரீம் குழாய்களில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று ஜெர்மனியிடம் முன்னதாக எச்சரித்திருந்தது.

ஆனால் அந்தக் கசிவுகள் எவ்வாறு ஏற்பட்டன என்பது தெரியவில்லை.

ரஷ்யாதான் அதைச் செய்தது என்று உக்ரைன் உறுதியாகக் கூறுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.